சத்தியவேதப் பிரகாசன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு தைமாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்

சுதேச வர்த்தமானம்

மகிமைச்சிலுவைச் சந்மானம்

கொழும்பிலே ஹல்லக்ரவுணில்வசிப் பவரான திரு. பி. எம். மார்செலின் அவர்கள் ரோமாபுரிக்கும், லூர்துதிருப் பதிக்கும், பரிசுத்தநாட்டுக்கும் திரு யாத்திரைசெய்துவிட்டுச் சமீபத்திலே மறுபடியும் இலங்கைவந்து சேர்ந் திருக்கின்றார். இவர் தமதுயாத்திரை யின்போது பரிசுத்தநாட்டின் அப்போ தைய பாதுகாப்பாளரான வண. ஹய கிந் எம். பக்கியோ சுவாமிகளால் பரிசுத்தபிதாவின் நாமத்தினாலே "மகி மைத் திருச்சிலுவை" எனும் மகிமை வரிசை சன்மானிக்கப்பெற்றார்.

அமெரிக்கன்மிஷன் அச்சகம்

யாழ்ப்பாணத்திலே 1834-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுக் கடந்த 121வருடங் களாக நடைபெற்றுவருவதும், கடந்த 50 வருடங்களுக்குமேல் தெல்லிப் பழையில் இருந்துவந்ததுமான அமெ ரிக்கன் மிஷன் அச்சகம் அங்கிருந்தும் பெயர்க்கப்பட்டு மானிப்பாய் ஐம்பத் திரியின்பக்கமாக உடுவில்வீதியிலே நவ மாய்அமைக்கப்பெற்ற கட்டடத்தில் இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை யன்றுகாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அங்கே இதன்திறப்புவிழா இம்மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமைபிற்பகல் 4-30 மணிக்கு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் தலைமையில் நடைபெறவிருப்பதாக அறிகின்றோம்.

புதிய தமிழ் நீதியரசர்

புதிய நீதியரசர்களாக நியமனஞ் செய்யப்பெற்ற டக்ளர் எச். டபிள்யு. தம்பையா அவர்களும், திரு. எச். ஏ. விஜமானஅவர்களும் சென்ற திங்கட் கிழமை காலை விசுவாசப்பிரமாணஞ் செய்து அசைஸ்கம்மிஷனர்களாகத் தங்கள் உத்தியோகபதவியைக் கை யேற்றிருக்கின்றனர். இவர்களிலே மூத்தியவர் கழுத்துறை அசைஸ்கோட் டிலும், பிந்தியவர் காலி அசைஸ்கோட் டிலும் முதன்முதலாக நீதியரசர்க ளாய்க் கடமையாற்றுவார்கள். டக்ளர் எச். டபிள்யு. தம்பையா அவர்கள்சட்ட சாஸ்திரத்தில் பிஎச். டி. பட்டம்பெற்ற முதலாவது இலங்கையராவர். கடந்த 22 வருடங்களாகக் கொழும்பிலே அப் பில்லீதித்தலத்திலும், வெளியிடங்களி லுள்ள நீதித்தலங்களிலும் கடமை பார்த்துவந்தஇவர் தற்போது காணிக் கமிஷனிலும், சட்டஉதவிக்கமிஷ னிலும் ஓர் அங்கத்தவராவர். ஓர்காலம் இவர் காலஞ்சென்ற சங். சூட்ஸ்நீதியர சருடனும், போதகியர் பி. நடராசா அவர்களுடனும் இலங்கைச் சர்வகலா சாலையில போதகாசிரியராய் இருந் தார். இவரது புதிய நியமனத்தாலே நியாயவாதத்தொழிலில் தாம்பெற்ற எவ்வளவோ வருமானத்தை இழந்து போவாரெனச் சொல்லப்படுகிறது.

ரோமையில் குருப்பட்டாபிஷேகம்

இலங்கையைச்சேர்ந்தவரான வண. டலஸ்டி சொய்சா பிறதர் ரோமாபுரி யிலே விசுவாசப்பரப்புதற்சபைக் கல் லூரிச் சிற்றாலயத்தில் குருத்துவாபி ஷேகஞ் செய்யப்பெற் றிருக்கின்றார். பரிசுத்த பாப்பரசரின் விக்கார்ஜெனற லான கருதினால் மிக்காரூஆண்டவரா லே சென்ற மார்கழிமாதம் 21-ந்திகதி யன்று குருத்துவாபிஷேகச் செய்யப் பெற்ற 33பேருள் இவரும் ஒருவர். இவர் கொழும்பிலே பொறளையில்வசிக் கும் ஒலிவர் ஜி. டி சொய்சா தம்பதிகளின் புதல்வர். ஏறக்குறைய மூன்றுமணித்தியாலமாக நடந்தேறிய குருப்பட்டாபிஷேக திருவைபவத்தின் போது இவர்பெற்றோரும் சமூகமா யிருந்தார்கள். அதன்மேல் புதியகுரு வரும், அவர்பெற்றோரும் ஏனையபுதிய குருமாரோடும், அவர்களின் பெற்ற ரோடும் வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்த பாப்பரசரின் பேட்டிபெற்ற போது, அவர் இவர்களோஆசீர்வதிக்க லாயினர். அதன்மேல் கல்லூரியில் நடைபெற்ற சிறுவிருந்துபசரணையின் போது புதியகுருமாரும், அவர்களின் சுற்றத்தவர்களும்உட்பட 400பேருக்கு மேல் சமூகமாயிருந்தார்கள். மறுநாள் வண. டலஸ்டி சொய்சாசுவாமியார் அங்குள்ள கல்லாயர் கன்னிகாசபை யின் மாகாணகன்னிகாமடத்துச் சிற் றாலயத்தில் தமதுமுதற்திவ்வியபூசைப் பலியை நிறைவேற்றினர். இச்சிற்று லயத்தைச் சுவாமியார் இதற்கெனத் தெரிவுசெய்யக்காரணம், அவருடைய தாயார் கொட்டாஞ்சேனையிலுள்ள நல்லாயர் கன்னிகாமடத்துக் கலாசா லைப் பழையமாணவியாக இருந்தமை யேயாகும்.

யாழ்ப்பாண நூல்நிலையம்

யாழ்ப்பாண மத்தியநூல்நிலையச் சங் கத்தின் கூட்டம் ஒன்று அதன்தலைவ ரான திரு. சாம் ஏ. சபாபதி அவர்கள் தலைமையில் சென்ற திங்கட்கிழமை நடந்தேறியது. அதிலே நூல்நிலையத் திற்கென்று இன்னும்அதிக நிதிசேக ரிக்குபடியாக இவ்வருடமும் மற்றோர் காணிவல் நடத்துவதெனத் தீர்மானிக் கப்பட்டிருக்கிறது.

வதிரி, திருஇருதயகல்லூரி

வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமி யவர்கள் வதிரி, விசாரணைப்பங்குக் கட்டளைக்குருவாகவும், திருஇருதய கல்லூரி அதிபராகவும் கடமையாற்றி வருவதால அவர் அதிகம் பயணஞ் செய்யவேண்டியிருக்கிறார்; அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார் என் பதை உணர்ந்த கம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் அவருக்கு ஒருவானூர்தி உப கரித்திருக்கின்றார். சுவாமியவர்கள் அதனை அயற்கிராமங்களிலிருந்து கல் லூரிமாணவர்களை ஏற்றியிறக்குவதற் கும் உபயோகிக்கத் தொடங்கியிருக் கிறார். சென்றவருடம் சிறேஷ்ட தரா தரப் பரீட்சையின் கல்லமுடிவு காரண மாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்லூரியிற்சேர மனுப்பண்ணி யிருந் தார்கள். ஆனால், இடவசதிக்குறைவு காரணமாக மேல்வகுப்பு மாணவர்க ளின் மனுக்களை நிராகரித்ததையிட்டுக் கல்லூரிஅதிபர் மனம்வருந்துகிறார்.

மாட்டுவண்டிப் பந்தையம்

சுதந்திரதினத்தைக் கொண்டாடு முகமாக யாழ்ப்பாண முற்றவெளியிலே முந்தியவருடங்களிற்போன்று வருகிற மாசிமாதம் 4-ந்திகதி சனிக்கிழமைபிற் பகல் 3-30 மணிமுதல் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிஒன்று நடந்தேறும். இப்போட்டியை நடத்திவைப்பதற் கென்று முதலியார் வி. மகேசன், திரு. டபிள்யு. எம். குமாரசாமி, முகாந்திரம் ஈ. பி. இராசையா, யாழ்ப்பாண ப் பொலிஸ்சுப்பிறின்டென்டன் டபிள்யு. எவ் சி. செபநேசன், காரியாதிகாரி ஏ. பெருமையினர், யாழ்ப்பாணநகரசபைக் கமிஷனர் ஏ. வி. சின்னையா ஆகியோ ரைக்கொண்ட ஓர்உபகமிற்றி தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

யேசுசபையில் சேருகின்றார்

கொழும்பிலே மெர்க்கன்தைல் வங்கி யிலே ஏறக்குறைய ஐந்துவருடகால மாக உத்தியோகபதவி வகித்திருந்தவ ரான திரு. லயனல் எஸ். பெர்ணண் டோஅவர்கள் தமதுபதவியைக் கை கெகிழ்ந்து பம்பாய்நகரிலே யேசுசபை யிற்சேர்ந்து குருப்பட்டத்துக்குப் படிப்பதற்காகச் சமீபத்திலே அங்கு பயணமாயினர். அங்கே இவர் ஐந்து வருடகாலம் இருந்துவருவார். இவர் கொழும்பு, செண். பெனடிற்கல்லூரி யில்கல்விபயின்றவர். கொள்ளுப்பிட்டி யிலே "லாயிஸ் வில்" எனும் இல்லத் தில் வசித்துவருகிறவரான ஈ. பி. பெர் ணண்டோ தம்பதிகளின் புதல்வர். இவருடைய சகோதரரான வண. ஆர் தர் பி. பெர்ணண்டோ சுவாமியார் தெகிவலை, அர்ச். மரியநாயகிகோவில் உதவிக் கட்டளைக்குருவாய் இருந்து வருகின்றார்.

உதவிச்சபாநாயகரின் பாராட்டுரை

திருக்குடும்ப கன்னிகாசபையின் அதிசிரேஷ்டரான அதிசங். யேசுவின் கிளேயர்தாயாருக்குப் புத்தளத்திலே சென்றதங்கட்கிழமை புத்தளப் பெற் றூர்-ஆசிரியர்சங்கத்தால் ஓர் வரவேற்பு உபசாரம் அருளப்பட்டது அதற்குப் பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபை யின்உபசபாநாயகரும்,புத்தளத்தொகு திப் பிரதிநிதியுமான ஜனப் எச். எஸ். இஸ்மாயில்அவர்கள் தலைமை வகித்துப் பேசியபோது: அப்பகுதியிலே கல்வி, சமய, சமூகாபிவிர்த்தி சம்பந்தமாய்த் திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரி மார் அதிகசிரத்தையுடன் ஆற்றிவரு கின்ற சிறந்ததொண்டுகளுக்கெல்லாம பெரும்பாராட்டுரை வழங்கலாயினர். சேனைக்குடியிருப்பிலுள்ள சந்தானுள் கன்னிகாமடத்தின் வாயிலிலே தாயார் அவர்கள் ஜனப் எச். எஸ். இஸ்மாயில் அவர்களாலும், புத்தள விசாரணைப்பங் குக்குருவர் வண. விசுவாசம் சுவாமிய வர்களாலும் வரவேற்கப்பெற்றார். புத் தளம், சந்தானுள் பெண்கள் கலாசாலை யிலே தாயார்அவர்கள் புத்தள உப்புச் சுப்பிறின்டென்டனை திரு. ஜே. அல் மீடியா அவர்களாலும் கலாசாலைத்தலை வியான சங். சிஸ்றர் மேரி போர்ஜெட் அவர்களாலும் வரவேற்கப்பெற்றனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

யாழ்ப்பாண நகரசபை உதவிமேயர் திரு. ஏ. நடராசாஅவர்கள்மீது நம்பிக் கையில்லாப் பிரேரணைஒன்று சென்ற திங்கட்கிழமை நடந்தேறிய அச்சபை யின் விசேஷகூட்டத்தில் ஒரேயொரு அதிகப்படியான வாக்கினால் நிறைவேறி யது. பிரேரணைக்குச்சாதகமாய் எட்டு வாக்குகளும், பாதகமாக ஏழுவாக்கு களும் கிடைத்தன.

மன்னார் உப்பளம்

மன்னார் உப்பளம் சென்றசனிக் கிழமை கைத்தொழில் – வீடமைப்பு – சமூகசேவாமந்திரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் திறந்து வைக்கப்படலாயிற்று. அவ்வேளை அவர் பேசியபோது, வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரத்தக்கதாய் அரசாங்கத்தினிடம் கடனுக்கேட்டிருக்கும்பணம் மன்னு ருக்குக் கொடுபடுமென்றும், மேலும் ஓர்உப்பளம் எருக்கலம்பிட்டிக் கருகா மையில் திறக்கப்படுமென்றும், அங்கு தொழில்நிலையங்கள் அமைக்கும்விஷய மாய் நிபுணர்கள்குழுஒன்று அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணியாரம். ஆனால், அணித்தால் அல்லவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசா. யோசேவாஸ்முனிவர்

— ஆசிரியர், எல். பாக்கியநாதர் அவர்கள் —

"கிருபைமிக்க கடவுளின்சித்தம் இந்தியாவின் நீண்டசரித்திரத்தில் அநேகாநேக சுத்தவாளரையும், தூயபண்புடையோரையும் பிறப்பித்திருக்கின்றது. இச்சுத்தவாளர் தமதுஅயலாரையும், அந்நியரையும் ஒன்றுகவேளண்ணினர். அன்பரையும், வன்பரையும் அவர்கள் சரிவரநேசித்தனர். தங்களையோ தாழ்நிலையிலும் இழிந்தவர்களென்று தாழ்த்திக்கொண்டனர். இவ்வாறான சுத்தர்களோ ஓர்படைபோலத் திரண்டுள்ளனர்."

இவ்வாறுக இந்திய கத்தோலிக்கரைப்பற்றி இலக்கணங் கூறியவர் பிரபல இந்தியர் 'விநோபாபா' அவர்களே. இவர் 1954-ம் ஆண்டு நத்தால்திருநாளன்று பீகார் மாகாணத்தில் பேசியபோது இவ்வாறுகுறிப்பிட்டார். விநோபாபா பண்பட்டவர். பண்டிதர். அஹிம்சாசீலர்காந்தியின் அறநெறியைக் கடைப்பிடிப்பவர். இந்தியரின் மனப்பான்மையைப்பிரதிபலிப்பவர். இப்பெரியாரின்கூற்றை நாம்பெரிதும் போற்றுகிறோம், ஆதரிக்கிறோம். இக்கூற்றுச் சிறப்பாக இந்தியகுருவர் ஆசாரத்திற்குரிய யோசேவாஸ்முனிவருக்கே சாலப்பொருந்தும். இந்த யோசேவாஸ்சுவாமிகள் இந்தியருக்கு ஓர்செய்தி கூறியிருக்கிறார். அவரின் செய்தி அன்பின்செய்தி. அவரின்தூது அன்பின்தூது.

"தேவநேசமும், பிறர்நேசமும் எப்போதும்உங்களிடையே உண்டாவதாக." "எங்களுக்காக மானிடனுய்ப்பிறந்த ஆண்டவன் இந்த கத்தால்பண்டிகைகாலத்தில் என்சகோதராராகிய உங்களுக்குவேண்டிய வரப்பிரசாதங்களைப்பொழிவாராக. இவ்வரப்பிரசாதங்கள் அநேகரின் ஆத்தும இரட்சணியத்திற்குப் பயன்படுவதாக....." உங்கள் தகுதியற்றஊழியனும், கிறீஸ்துநாதரில் உங்கள்சகோதரனுமான 'யோசேவாஸ்' என்பது அவரின்செய்தி.

"அன்பும், சேவையும் கிறீஸ்துவசீவியத்தின் இருமுக்கிய பண்புகள். இப்போது இப்பண்புகளை இலக்காகக்கொண்டு என்நாளாந்த வாழ்க்கையை நடத்தஆசிக்கிறேன். ஆதலின் அவர்களின் தீர்க்கதரிசிகள், பரிசுத்தர்கள், கல்விமான்கள் ஆதியோரின் பாதத்தில் அமர்ந்திருக்க நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்பது விநோபாபா அவர்களின்கூற்று. புதுஇந்தியாவும் இப்பெரியாருடன் சேர்ந்து இதேஅபிப்பிராயத்தை அறிக்கைசெய்கின்றது.

பெரியாரின் பாதத்தண்டையில் அமர்ந்திருக்க ஆசிக்கின்றது.

யோசேவாஸ்முனிவர் இந்தியாதந்த பக்திமான்களுள் ஒருவர். கீழைத்தேயம்ஈன்ற கத்தோலிக்கரிற் சிறந்தவர். இவரின்பாதத்தில் பணிந்திருக்க இந்தியா இன்றுவிழைகின்றது.

யோசேவாஸ்முனிவரின் செய்தி கிறீஸ்துநாதரின்செய்திதான். கிறீஸ்துநாதரின் சீஷர்களுடைய செய்திதான். இந்தியாவுக்கு இச்செய்தி புதிதான செய்திஅல்ல. இந்தியாவின் பரம்பரையிலும், பாரம்பரியத்திலும் பரந்துகிடந்த செய்திகளில்சிறந்தன இச்செய்தியில் அடங்கும். இச்செய்தியைஇன்று இந்தியாவுக்குநினைவுறுத்துபவர் இந்தியாவின் புதல்வர்ஒருவரே. விநோபாபாபா அவர்கள் அழகுறச் சொல்லுவது: "யேசுக்கிறீஸ்துநாதர் எமதுசொந்தம். எமதுநாட்டில் யேசுவும், அவரதுபோதகமும் என்றுமே அனுபவமற்றதும், அந்நியநாட்டுஅநுசாரமுமாகக் கொள்ளப்படவில்லை. அவர் எங்கள்குடும்பத்தின் அங்கத்தவர். அவர் புறநாட்டிலிருந்துவந்த வேண்டாப்பொருள்என்று நாம்என்றுமே வெறுத்ததில்லை." இந்தக் கிறீஸ்துநாதருக்கு இந்தியா உவந்தளித்த உன்னதகொடைஆசாரத்திற்குரிய யோசேவாஸ்முனிவராவர். இந்தமுனிவர் அயலாரைச்சேவித்து நேசிப்பதன்மூலம் கிறீஸ்துநாதரைச் சேவித்து, நேசித்துவந்தார். விசேஷமாக வறியோர்மட்டிலும், அநாதைகள்மட்டிலும் கரிசனைகாட்டினர். அவரின்முழுவாழ்வும் மற்றவருக்காகச் சீவிப்பதிலேயே செலவிடப்பட்டது.

பிராமண குடும்பத்தவரான இம்முனிவர் கிறீஸ்துநாதரின் சகோதரர்மட்டில் சாதிப்பிரிவைச் சட்டைசெய்யவில்லை. தாம் பிராமணராய்இருந்தும், தம்மைச்சூழப் பல்வேறுசகோதரரையும் இருக்கவிட்டார். அவர் எங்கிருந்தாரோ அங்கே ஒற்றுமைகாணப்பட்டது. இவ்வாறுக இன்றையஇந்தியாவுக்கு அவர்விட்டுச்சென்றசெய்திகளில் "ஒற்றுமைஒன்று." அதாவது, பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் கூறுவதுபோன்று 'உண்மையிலும், நிகேகத்திலும்ஒன்றுபட்டிருத்தல்'என்பது யோசேவாஸ்முனிவர் இந்தியாவுக்குவிட்டுச்சென்ற ஈருந்தசெய்தி இன்பம்பயப்பது. "நான் ஒன்றுமின்மையானவன்; என்னில்ஆவதும்ஒன்றுமில்லை; தேவஏவுதலின்படி வாழ்க"என்பது. இன்றைய இந்தியாவுக்கு இச்செய்தி மிகவும்உவந்ததே.

அப்பா! நீ யார்?

தேவபக்தியில் பெயர்பெற்ற அயர்லாந்தின்தலைப்பட்டணமாகிய டபிளின் நகரிலுள்ள ஓர்பெரிய விசாரணைப்பங்குக்கோவிலிலே அதன்பெயர்கொண்டவரின் திருநாளுக்குமுன் பலதினங்களாகக்கிறீஸ்துவர்களுக்குஞானவொடுக்கம் போதிக்கப்பட்டது. பிரசங்கஞ்செய்வதில் பிரசித்திபெற்ற குருவானவர்ஒருவர் வரவழைக்கப்பெற்று, அவரால் மிகவருமையான பிரசங்கங்கள் தினந்தோறும் செய்யப்பட்டுவந்தன. இத்தக்குருவானவர் முதல்நாள் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தபோது, கோவிலுக்குள் திடீரெனஒருவர் நுழைவதைக் கவனித்தார். பின்னர் ஒருநிமிஷந்தானும் கோவிலில்தங்காது உடனேதானே என்னவேகமாய்க் கோவிலுள்நுழைந்தாரோ, அதேவேகமாய்க் கோவிலைவிட்டு வெளியேறினார். இவ்வாறு அதேமனிதனையே ஒருநாளல்ல, இருநாளல்ல, அமீகநாளாய்க் கவனித்துவந்தார் பிரசங்கியார். "என்னவிபரீதம்! இந்தமனிதன் கோவிலுள் நுழைவதும் தெரியவில்லை; வெளியேறுவதும் தெரியவில்லை; எதற்காகவருகிறார்? என்னசெய்கிறார்? என்றும் தெரிபவில்லை. இவர் தேவகற்கருணைசந்திக்க வருகிறரென்று சொல்லவுமிடமில்லை; ஒருகால் அவரை விசாரிக்கவேண்டும்" என்று தமக்குள்தீர்மானித்துக்கொண்டார் சுவாமியார்.

மறுநாள் அந்தமனிதன் வழக்கம்போலக் கோவிலுக்குள் நுழைந்துவெளியேறும்வேளை சுவாமியார் அவரையணுகி, "அப்பா நீயார்? அநேகநாட்களாக உன்னைஅவதானித்தேன்; கோவிலுள்நுழைவதும் தெரியவில்லை; வெளியேறுவதும் தெரியவில்லை; நீ சற்பிரசாதநாதரைச் சந்திக்கவந்தால் யாதாமோர்செபமும் செய்வதாகத்தெரியவில்லை; உனதுநடபடி எனக்கு மிகவிநோதமாயிருக்கிறது" என்றனவ, அந்தமனிதன் அவரைநோக்கி: "சுவாமி! நான் இந்தக்கோவிலைச் சேர்ந்தவன்; என்பெயர் ஜோர்ஜ்; எனதுநண்பர்கள் என்னை 'ஜோ'என்றசெல்லப்பெயரால் அழைப்பார்கள்; நான் வறியநிலைமையிலுள்ள ஓர்தையற்காரன்; எனதுபாரியகுடும்பத்தை எனதுசொற்ப வருமானத்தைக்கொண்டு சம்ரட்சணைசெய்யவேண்டியிருப்பதால் எனக்கு நேரம் அதிகமில்லை; ஆகவே, வேலைக்குப் போகுமுன் கோவிலுள்பிரவேசித்து, முழந்தாளிலிருந்து "யேசுவே, ஜோ இதோ!" என்று சொல்லிவிட்டு உடனேதானே வெளிகொண்டுபோய் எனதுவேலையைப் பார்ப்பதுவழக்கம்; 'யேசுவே, ஜோ இதோ!'; இதுதான் சற்பிரசாதநாதரைநோக்கி நான்சொல்லும் வார்த்தைகளெல்லாம்; இதுதான் நான்சொல்லும் செபமெல்லாம்; இதைத்தவிர வேறுஒன்றும் கிடையாது; நான் ஓர்வறிய தையற்காரனென்றும், எனக்கு அதிகநேரம் இருந்தால்நான்கோவிலில் அதிகநேரம் தங்கியிருந்து அவரைச் சந்திப்பேன் என்றும் அவருக்குத்தெரியும்" எனப் பதிலுரைத்தான். இதைக்கேட்டதே "சரி, மெத்தச் சந்தோஷம்; அப்படியே தினந்தோறும் செய்துவா" என்றுசொல்லி, அவனை அன்பாய் ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார் சுவாமியார்.

மூன்றுவருடங்கள்கழிந்தன. அதேகோவிலில் அதேகுருவானவர் மற்றும் ஓர்தாம் ஞானவொடுக்கபிரசங்கம் செய்துவருகிறார். ஓர்நாள் பங்குக்குருவானவரும், அவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, "சுவாமி! ஓர்ஏழைமனிதன் மரிக்கும்தருவாயில் இருக்கிறார்; அவருக்கு அவஸ்தைகொடுக்கவேண்டும்; நிவ்வியநன்மையும் வாங்கஆசிக்கிறார்; சீக்கிரம்வந்தால் நல்லது" என்று பங்குக்குருவானவரிடம் பகர்ந்தார், ஓர்வர்ஓடிவந்து. அப்போது பிரசங்கஞ்செய்ய வந்திருந்த சுவாமியார் தாம்போய்வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார். அவஸ்தையாய்க்கிடந்த மனிதனிடம்சென்று, பாவசங்கீர்த்தனங் கேட்டுவிட்டுத் திவ்வியசற்பிரசாதநாதரைக் கடைசியாய்க் கொடுக்கப்போகும்வேளை, 'யேசுவே, ஜோ இதோ!' என்று அம்மனிதனின் வாயிலிருந்து புறப்பட்டவார்த்தைகளை மிகத்தெளிவாய்ச் சுவாமியார் கேட்டார். உடனே மூன்றுவருடங்களுக்குமுன் கடந்தசம்பவம் அவர்ஞாபகத்திலே வரவே, உற்றுநோக்கினார் அம்மனிதனை. கண்டுகொண்டார், தாம்முன் சந்தித்துப்பேசிய வறியதையற்காரன் ஜோ அவன்தானென்று. சிறிது நேரத்திற்கெல்லாம் ஜோவின் ஆத்துமம் பறந்தோடியது பரலோகத்திற்கு. என்னபாக்கியமான மரணம்! என்னே அக்குருவானவர் அடைந்த பரமானந்தம்!

காரும் ஜோவைப்போல் அணுதினமும் அதிகநேரமில்லையாயின், சிறிதுநேரமாவது 'வருந்திச் சுமைசுமக்கிறவர்களே! நம்மிடம்வாருங்கள்' என்றுசொல்லிக்கொண்டு நமக்காக நமதுகோவில்களிலே திவ்விய நற்கருணைப் பேழையில் காத்திருக்கின்ற நேசயேசுவைச் சந்திப்போமாக!

— R. M.

● கோறியாவிலுள்ள அமெரிக்கபடைவீரர்களுடன் தமது ஐந்தாவது கிறிஸ்மஸைக்கழித்தகருதினல்ஸ்பெல்மன் ஆண்டவர் அவர்களுக்கென்று 2,50,000 சிகரெற்றுகள் தம்முடன் கொண்டுசென்றார். அவர் கோறியாவில்தங்கியிருந்தபோது அங்காட்டின் வறியவர்களுக்கென்று அமெரிக்ககத்தோலிக்க தருமஸ்தாபனங்களால் சேகரித்துக்கொடுக்கப்பட்ட உடைகளை அவர்களுக்கெல்லாம் வழங்கலாயினர்.

● மனிதசமுதாயத்தையே ஒழித்துக்கட்டுவதற்குத் தேவையான அளவிலே சலவாயுக்குண்டுகள் அமெரிக்காவிடம் இருக்கின்றனவென்று அமெரிக்க அணுச்சக்திக்கமிஷன் அங்கத்தவருள்ஒருவரான செனற்றர் ஜோன் பிறிக்கர் அவர்கள் சென்றதிங்கட்கிழமை கொக்ஸ்வில்லேயனுமிடத்தில் அளிக்கப்பட்டவிருந்தில் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹாவர் அவர்களிடம் தெரிவித்தாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியறிதலின் ஞாபகார்த்தக் கோவில்

ரூஷியர்களாலே சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பெற்ற ஜேர்மன் கத்தோலிக்க போர் வீரர்கள் தங்கள் விடுதலைக்கு நன்றியறிதலாக ஜேர்மனியிலே போர்ச்சும்எனுமிடத்தில் ஓர் கோவிலைக் கட்டவிருக்கின்றார்கள். எகிப்திலிருந்து திரும்பியதை மகிமைப்படுத்து முகமாக இக்கத்கோவில் திருக்குடும்பத்தின்பேரால் பிரதிட்டைசெய்யப்படும். இன்னும் ரூஷியாவிலிருந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பும்வழியிலே மேற்குஜேர்மனியிலுள்ள பிறீட்லான்ட் மூகாமைக் கடந்து செல்லும் ஜேர்மன் யுத்தகைதிகள் உவந்தளித்த பணஉதவிகொண்டு அந்தமுகாமிலும் ஓர்புதியகோவில் கட்டப்பட்டிருக்கின்றது. சமீபமாகவுள்ள கொயெற்றின்ஜென் சர்வகலாசாலையிற் படிக்கின்ற பத்துநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் ஓய்வுநேரங்களில் இந்தக் கோவிலில் மிகப்பெரும்பகுதியான வேலையைச் செய்து முடித்தார்கள்.

பாப்பரசரும் பழையவருடமும்

சென்ற 1955-ம் ஆண்டின் முற்பகுதியிலே பரிசுத்தபாப்பரசர் சீவாபாயத்துக்குரிய நோய் கண்டிருந்தபோதிலும் அவ்வருடத்திலே மிகப்பெருந்தொகைப் பணிகளை ஊக்கமாக ஆற்றியிருக்கிறாரென வத்திக்கான் அச்சககாரியாலயம்விடுத்துள்ள ஓர்அறிக்கை தெரிவிக்கின்றது. உதாரணமாக அவ்வருடத்திலே அவர் 59 சொற்பொழிவுகளும், வானொலிப்பேச்சுகளும் நிகழ்த்தியிருக்கின்றார். இவற்றிலே இத்தாலியபாஷையில் 25. பிரான்சியபாஷையில் 22 ஆங்கிலபாஷையில் 6. ஸ்பானிய பாஷையில் 5. போர்த்துக்கேய பாஷையில் 1. காஸ்தெல்காந்தல்போவிலும், வத்திக்கானிலும் 3,70,000 மக்களுக்குப் பகிரங்கபேட்டியளித்திருக்கின்றார். 40 அந்தரங்கபேட்டிகளும் அளித்திருக்கின்றார். இப்பேட்டிகள் பெற்றவர்களில் குளஸ்டரின் டியூக்கோமகனும், நெதர்லாந்தின் பேண்ஹாட் இளவரசரும், ருவான்டாநாட்டின் மத்துரு அரசரும், இத்தாலி, லெபனன் நாடுகளின் ஜனாதிபதிகளும் பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி, துருக்கி, இந்தியா, தாய்லாந்துஎனும் நாடுகளின் பிரதமர்களும், பிரான்ஸ், பெல்ஜியம், ஐக்கியஅமெரிக்கதேசம், மேற்குஜேர்மனி என்பனவற்றின் வெளிநாட்டுமந்திரிமார்களும் அடங்குவார்கள். தினமும் கருதினல்மாரையும், ரோமன்கியூரியாவைச்சேர்ந்த குருசிரேஷ்டர்சிலையும் அந்தரங்கபேட்டிகளில் வரவேற்றிருக்கின்றார். பர்மா, ரொடேசியா, பிரான்சிய மேற்குஆபிரிக்கா, சமரேகையையடுத்த ஆபிரிக்கா, பின்லாந்து எனும்நாடுகளிலே மேற்றிராணிமார்களின் அதிகாரவரிசையை ஏற்படுத்தியிருக்கின்றார். சீனாவின் 56 வேதசாட்சிகளும், பிரான்சிய அரசியற்புரட்சியின் போது உயிரிழந்த 19 வேதசாட்சிகளும் முக்திப்பேறு பெற்றபட்டம் அருளப்பெற்றிருக்கின்றார்கள்.

ரோமாபுரியில் குருப்பட்டம்

ரோமாபுரியிலுள்ள விசுவாசப்பரப்புதற்சபைக் குருமடத்தில் கடந்தேறும் வருடாந்த குருப்பட்டாபிஷேக திருவைபவம் இம்முறை சென்ற கிறிஸ்மஸ் விழாவிற்குமுன் வந்தபோது, ரோமைநகரின் விக்காரஜெனரலான கருதினல் மிக்காரு ஆண்டவரால் 16 நாடுகளைச் சேர்ந்த 34 தியாக்கோன்மார் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஆறுபேர் இந்தியாவையும், ஆறுபேர் வியெற்நாமையும், நான்குபேர் சீனாவையும், ஏனையோர் கனடா, இலங்கை, கோவா, கிறீஸ், அயர்லாந்து, கெனியா, லெபனன், மாட்ரினிக், கைஜீரியா, ஐக்கிய அமெரிக்கா, தொகோலாந்து, உகண்டா எனும் நாடுகளையும் சேர்ந்தவர்கள். ஐக்கிய அமெரிக்கதேசத்திலுள்ள 27 மேற்றிராசனங்களைச்சேர்ந்த 28 குருத்துவமாணவர்களும் ரோமாபுரியிலுள்ள வடஅமெரிக்க குருமடத்தின் தலைவரான ஓ'கொனர் மேற்றிராணியாரால் சென்ற கிறிஸ்மஸ்விழாவுக்குமுன் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள்.

ரூஷியாவில் சமயவளர்ச்சி

ரூஷியாவிலே அதிகமதிகமான மக்கள் சமயத்தின் பக்கமாகத் திரும்பிக்கொண்டிருக்கிறார்களென்று சமீபத்திலே ரூஷிய மக்களுக்கென நிகழ்த்திய ஓர் வானொலிப்பேச்சில சோவியற் அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். "யுத்தகாலத்திலே ரூஷியமக்கள் மிகப்பெருங் கொகையாகச் சமயத்திற்குத் திரும்பினர்கள்; அப்போதும், அதன்பின்பும் யுத்தமானது சமயநம்பிக்கைகளைப் பலப்படுத்துவதற்குப் பெருந்துணை செய்வதாயிற்று" என்று சோவியற்கலாசார மந்திரிகுழுவைச் சேர்ந்த திரு. எம். பி. கொறிற்சின் கூறுகின்றார். "அதேகாலத்தில் பல்வேறு கிறீஸ்துவ சபைகளைச் சேர்ந்த குருமாரும், கிறீஸ்தவர்களும் தங்கள் சமய பிரசாரத்தை மும்முரமாக நடத்தினர்கள்; சமயகடன் திருநாட்களின் அனுசாரம் கடந்தகாலங்களில் மிகப்பெரும் தீமைகளில் ஒன்றாயிருந்தது; சமயத்தின்மட்டிலே கம்யூனிஸ்தகட்சி நடுநிலைமையுடையதாய் இருந்துவரப்படாது; சமயநம்பிக்கைகள் ஓர்இயற்கைமரணத்திற்குள்ளாகுமென நினைப்பது மிகவும் யோசனையற்றதாகும்; இத்தகைய கருத்துகள் மார்க்ஸியத்திற்கும், கம்யூனிஸ்தகட்சிக்கும் விரோதமாகும்" என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

நசரேத் மகாலயம்

நசரேத்திலே நவமான மங்களவார்த்தை மகாலயத்தைக் கட்டியெழுப்பும்வேலை இவ்வருடத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. பரிசுத்தகன்னிமரியம்மாள் திவ்வியகர்த்தரின் திருமாதாவாயிருக்கப் போகிறாரென்று அவருக்குக் கபிரியேல்சம்மனசானவர் தெரிவித்த அதேயிடத்தில் கட்டப்படவிருக்கும் நான்காவது ஆலயம் இதுவாகும். இது பூர்த்தியடையுமிடத்து மத்தியகிழக்குப் பிரதேசங்களிலுள்ள மிகப்பெரிய ஆலயங்களில் ஒன்றாகவிளங்கும். அவ்விடத்தில் இருந்துவந்த முதலாவது ஆலயம் நான்காம்நூற்றாண்டளவில் கட்டப்பெற்று, எழுநூறுவருடங்களின்பின் அழிக்கப்படலாயிற்று. சிலுவைப்படை வீரர்கள் அதைத்திரும்பக் கட்டியெழுப்பினர். 1219-ம் ஆண்டு அர்ச். பிரான்சிஸ் அசீஸியார் இதனைத் தரிசிக்கலாயினர். ஏறக்குறைய ஐம்பது வருடங்களின்பின் எகிப்திய சுல்த்தான் இதனை அழித்துவிடும்படியாகக் கட்டளையிட்டான். தற்போது இடிக்கப்பட்டுள்ள மூன்றாவது ஆலயம் பிரான்சிஸ்கன் சபையாரால் 1730-ம்ஆண்டு கட்டப்படலாயிற்று.

வத்திக்கானும் சினிமாவும்

சினிமாவைப்பற்றிய விஷயமாய்ச் சமீபகாலத்திலே பரிசுத்தபிதாவர்கள் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளாலே உலகமுழுவதும் மிகுந்தகரிசனை எழுந்திருக்கும் காரணமாகச் சினிமாசம்பந்தமாய்த் திருச்சபையின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டி வத்திக்கான் ஓர் புத்தகத்தைவெளியிடத் தீர்மானித்திருக்கின்றது. சினிமா, றேடியோ, ரெலிவிஷன் ஆதியனபற்றிய பாப்பரசின் கொம்மிஷனுக்குத்தலைவராய் இருந்துவருகிறவரான பென்சில்வேனியாவைச்சேர்ந்த மொன்சிஞ்ஞோர் மாட்டீன் ஓ'கொனர் சுவாமிகளே இப்புத்தகத்தைப் பிரசுரஞ் செய்வதற்குப் பொறுப்பாளியாயிருப்பார். "திருச்சபையின் போதனையிலே சினிமா" எனும் நாமத்தைக்கொண்ட இப்புத்தகம் பிரான்சியபாஷையில் வெளியாகும். சினிமாவைப்பற்றி அதிகஞ் சமீபத்திலே பாப்பரசர் நிகழ்த்திய சொற்பொழிவானது கத்தோலிக்கரும், கத்தோலிக்கர்அல்லாதோருமான சினிமாத்தொழிற் தலைவர்கள்மத்தியிலே ஆழ்ந்த மனப்பதிவை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது.

அதிமேற்றிராணியாரின் யூபிலி

ஆஸ்திறேலியாவிலே பிறிஸ்பேனகர் அதிமேற்றிராணியாரான டூஹிக் ஆண்டவர் சமீபத்திலே தமதுகுருத்துவ 60-ம் வருட வைரயூபிலி விழாவைக் கொண்டாடவிருக்கின்றார். ஏற்கனவே இவர் யூபிலிவிழாக்களைக் கொண்டாடிப் பழகியவர். சென்ற ஆண்டிலே இவர் தமதுமேற்றிராணித்துவ தங்கயூபிலிவிழாவைக் கண்டபோது, பரிசுத்தபாப்பரசர், எலிசபெத் மகாராணியார், ஆஸ்திறேலியபிரதமர் ஆர். ஜி. மென்சீஸ், குடியரசு அயர்லாந்தின் ஜனாதிபதி முதலாம் பிரபலஸ்தர்களிடமிருந்து சோபனவாழ்த்துச்செய்திகள் பெற்றார். டூஹீக் அதிமேற்றிராணியார் அயர்லாந்திலே லிமெறிக்நகரில் இற்றைக்கு 84 வருடங்களின்முன் பிறந்தார். 1896-ம் ஆண்டு ரோமாபுரியில்குருப்பட்டம்பெற்றார். குயின்சிலாந்திலே ரொக்ஹாம்பன்நகர் மேற்றிராணியாராக 1905-ம் ஆண்டு இவர் அபிஷேகஞ்செய்யப் பெற்றபோது, உலகின் அதிகம் இளவயதுடைய மேற்றிராணியாராய் விளங்கினார். ஆஸ்திறேலியாவில் அபிஷேகஞ் செய்யப்பெற்ற மேற்றிராணிமாருள் முதன்முதலாக மேற்றிராணித்துவ தங்கயூபிலியைக் கண்டவர் இவரே.

லட்சாதிபரான குருவானவர்

போர்த்துகல்காலிலே பிரக்கா எனுமிடத்தில் எட்சாதிபரான ஓர்குருவானவர் சமீபத்திலே தமது 95-ம் வயதில் காலஞ்செல்லலாயினர். ஆனால், அவர்மரிக்குமுன் தமது பிரேதஅடக்கம் இயன்றமட்டும் சாமானியமான தொன்றாய் இருக்கவேண்டும், தமதுஉடல் கிராமச்சேமக்காலையில் அடக்கப்படவேண்டுமென்றும் ஆஞ்ஞாபித்திருந்தார். வண. அகுஸ்தோ டயஸ் டிசில்வாஎனப்பெயரிய இக்குருவானவர் பிறேசில்நாட்டிலே பெருஞ் சொத்துகளுக்குச் சொந்தக்காரராயிருந்த தமது சகோதரரிடமிருந்து பத்துலட்சம்பவுண் உரிமையாகக் கிடைக்கப்பெற்றார். அவர் ஏழைகள்மட்டில் மிகுந்த தயாளசிந்தையுடையவராய் அவர்களுக்கு ஏராளமாகத் தருமம் வழங்கிவந்தார்.

கத்தோலிக்க சமாச்சாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமாதம்

போதுக் கருத்து: மெய்யான திருச்சபையைத் தேடுகிறவர்கள் பாப்பானவரின் தலைமையே திருச்சபையின் ஐக்கியத்திற்கு அத்திபாரமென்பதைக் கண்டுணரும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: சீனக்கத்தோலிக்கமக்கள் தங்களுள் ஒற்றுமையாய், திருச்சபையோடு இணைபிரியாதவிதமாய்ச் சேர்ந்திருக்கும்படியாக மன்றாடிக்கொளவது.

சத்தியவேத
பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
தைமாதம் 26-ந் திகதி

குருத்துவ வெள்ளியூபிலி

தற்போது மயிலிட்டிக்கட்டகோக்குரவராய் இருந்துவருகிறவரான வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள 1931-ம் ஆண்டு மாசிமாதம 2-ந்திகதியாகிய தேவமாதாவின் சுத்திகரத்திருநாளன்று குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றாகலின அவரது குருத்துவ 25-ம் வருட வெள்ளியூபிலி அடுத்துவருகிறமாசிமாதம் 2-ந்திகதி வியாழக்கிழமை வருகின்றதென்னும் சுபசெய்தியானது, அவர்சுற்றத்தவர்களுக்கும், மற்றும்அவரிடம் பலவிதநன்மைகளைப் பெற்றுக்கொண்ட பல்லாயிரக்கணக்கான ஞானமக்களுக்கும் ஓர் மகிழ்ச்சிகர செய்தியாகுமென்று சொல்ல வேண்டியதில்லை. 'இன்னறுமை' யென்று அந்நாளிலே சிறப்புப்பெயர் தாங்கியிருந்த சில்லாலைப்பதியிலே ஸ்ரீ ஏ. சந்தியாகுப்பிள்ளைஎன்றும், ஸ்ரீ எஸ். அந்தாம்பிள்ளை (சின்னப்பாபிள்ளை) என்றும் பெயர் விளங்கியிருந்த பிரபல ஆயுள் வேத வைத்தியர்களின் பரம்பரையிலுதித்த யூபிலிநாயகர் அவர்கள் இளமையிலேயே தம் முன்னோரைப்போல ஓர்ஆயுள் வேதவைத்தியராக வேண்டுமெனச்சிந்தியாது, தேவஅழைத்தலின் குரலொலிக்குச் செவிசாய்த்து, ஓர் ஆன்மவைத்தியராக முனைந்தார். தமக்குமுன் அதேகுரலொலிக்குச் செவிசாய்த்துத் தமதுகுடும்பத்தில் முதலடிஎடுத்துவைத்த தம்முடையபெரியதாயாரின் புதல்வரும், ஆங்கில "பாதுகாவலன்" ஆசிரியராகப் பிரஸ்தாபம்பெற்றிருந்தவருமான வண. பி. எம். பிரான்சீஸ்சுவாமிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். குருமடத்தில்சேர்ந்து வேதசாஸ்திரங்கள்படித்துக் குருப்பட்டம் பெற்றார்.

சுவாமியவர்கள் தமதுமுதற் பூசைப்பலியை நிறைவேற்றிய மபான்னனதினமன்று தமக்கு அளிக்கப்பெற்ற மகத்தான வரவேற்புவிழாவில் தாம கூறிய மொழிகளை — அதாவது "குருபதவி பெரியபதவியாய் இருப்பதுபோன்று அதன் கடமைகளும் பெரியனவாகும்" என்று தாம்கூறியமொழிகளை உளத்திற்கொண்டுதமதுகுருத்துவகடமைகளைப் பெருமபரித்தியாகங்களுடன் நிறைவேற்றிவந்திருக்கின்றார். அவர் இளவாலை, முல்லைத்தீவு, வவுனியா, பேசாலை காரம்பொன்முதலாம்விசாரணைப் பங்குகளிலே உதவிக்கட்டளைக்குரவராய், கட்டளைக்குரவராயிருந்தும், பலவருடகாலமசம்பத்திரிசியார்கல்லூரிப் பொக்ஷகராயிருந்தும் ஆற்றியுள்ள புகழ்ச்சிக்குரிய அருஞ்சேவைகளையும், ஆங்காங்கு அவரதுஆற்றலினதும், அயராஉழைப்பினதும் ஞாபகமாகத்திகழும் அருஞ்சின்னங்களையும் ஈண்டுவர்ணித்துக் கூறுவது இயலுந்தன்மையன்று. அரிதானகாரியங்களைச் சாதிப்பதிலே சிறந்த ஆற்றல் படைத்தவரான சுவாமியவர்களின் அருமுயற்சியால்பேசாலை, பரிசுத்த வெற்றிநாயகியின் ஆலயமுகப்பு அடைந்துகொண்ட பேசரும்வனப்பே வனப்பு! அவரது பெருமுயற்சியால தன்னகத்தே நவமாக, தேசோமயமாக, கண்ணேயேகவர்வதாகப் பொன்னுலயம்போன்று கட்டியெழுப்பப்பட்டுப் பொலிவுற்றுமிளிரும் அர்ச். செபஸ்தியாரின் பொன்னம்பெரிய ஆலயத்தையிட்டுப் பெருமைபாராட்டும் கரம்பொன்பதியின் சிறப்பே சிறப்பு! அன்றுசுவாமிகளுக்குக் கரம்பொன்பதிமக்கள் படித்துக்கொடுத்த வாழ்த்துப்பத்திரம்ஒன்றில் — "இடித்தகோவிலை எழுப்பவழியின்றிஏங்கியிருந்தஎமக்கு நீவிர் அஞ்சல்! அஞ்சல்!! என அபயந்தந்து, கைகொடுத்து, நாடுநாடாய், வீடுவீடாய்த்திரிந்து, பணந்திரட்டிப் போதாமல் கடன்பட்டும் எங்கட்கு ஓர்அழகான, பெரிதான, பொன்நகரின் பெயர்மங்காப் புனிதமான ஆலயமொன்றை எழுப்பித்தந்தீர்கள். என்னே, தங்கள் பேராற்றல்! இவ்வளப் பருஞ்சேவையை எங்களாலும், எங்கள் பின்சந்ததியாலும் மறக்கமுடியுமோ? முடியினும் வானளாவிய இவ்வாலயம் உங்கள் அரியசேவையை உலகிற்கு எடுத்துக்காட்டாதோ? ஆலயமெழுப்பும் பாரியவேலையில் ..... தனித்துநின்று, மெய்வருத்தம் பாராது இழைத்த அரியசேவைக்குஈடாக இப்பொன்நகரைத் தரினும்போதுமோ?" — என்று காட்டப்பட்டிருப்பதே நாம்எடுத்துக்கூறியவற்றிற்குப் போந்தசான்றாகும்.

கிற்க, சுவாமியவர்கள் எந்தெந்த விசாரணைப்பங்கு சென்றாலும் அங்கங்கெல்லாம தமது ஞானமக்களைத் தம்பால் வசீகரஞ்செய்யவல்ல அரியகுண விசேஷங்களைத் தம்மிலேசிறப்பாகக் கொண்டுள்ளவர். புன்னகைதவழ, அன்புகனிய, செல்லம்பொழிய, அவர்வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வோர்இன்சொல்லும் ஆயிரம்பொன் சொரிந்தவாறாயிருக்கும். கல்லூரிப் பொக்ஷகராய் இருந்தகாலத்திலோ, அன்றேல்பல்வேறு விசாரணைப் பங்குகளிலும் தொண்டாற்றிவந்த காலத்திலோ அவர் தமதுஅன்பாலே, அணுதாபத்தாலே, அரவணைப்பாலே, தருமசிந்தையாலே, அரியபுத்திபோதனையாலே, பிறர்துக்கம் சகியாப் பெருங்குணத்தாலே ஆசிரியர்கள், பணியாளர்கள், பங்குக்கிறீஸ்தவர்கள்முதலாம்அனைவர்க்குமே ஓர்அன்பராய், அருமைத்தந்தையராய், ஆன்மஇரட்சணிய வாஞ்சைசிறைந்த ஓர்அருங்குரவராய் விளங்கிவராயினர். எல்லாவற்றினும் மேலாய் அவர் எத்திறத்தினரையும் சமாதானமாய், சந்தோஷமாய்ச் சமாளித்துநடத்தும் பெருந்தன்மையின் சிறப்பே சிறப்பு! பிதாவுக்குரிய பேரன்புடன் சகலரோடும் இனிதே புழங்கிவரும் வனப்பேவனப்பு! இத்தகைநாமும் சுவாமிகளுக்கு யூபிலிச்சோபனம் கூறுகின்றோம். அவர்இன்னும் பல்லாண்டுகாலம் யாழ்ப்பாணத் திருச்சபை உத்தியானத்திலே சுகதேகியாய், திடதேகியாய், சிரஞ்சீவியாய்வாழ்ந்து மேலும் பல்லாயிரக்கணக்கான ஆன்மாக்களுக்கு இரட்சணியமாய் விளங்கும்படியாக இறைவன் திருவருளை இரந்துநிற்கின்றோம்.

தமிழர் ஐக்கியமுன்னணி

நாம் எதிர்பார்த்தபடியே சென்ற 18-ந் திகதியன்றிரவு கூடிய ஐக்கியதேசியக்கட்சியின் விசேஷ பிரேரணைக் கம்மிற்றியிலே, சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகள்பற்றித் திரு. எஸ். நடேசன் அவர்கள் சமர்ப்பித்த பிரேரணையையும், திரு. வி. குமாரசாமி அவர்கள் சமர்ப்பித்த 'தமிழ்நாடு'பற்றிய பிரேரணையையும் வருகிற மாசிமாதம் 18-ந் திகதியன்று களனியிற்கூடவிருக்கும ஐக்கியதேசியக்கட்சியின் வருடாந்தமகாநாட்டிற்குச் சிபாரிசு செய்வதில்லையென்றும், பாணந்துறைப்பிரதிநிதியான திரு. டி. சி. டபிள்யு. கன்னங்கரா என்பாரது "சிங்களம்மட்டுமே" என்ற பிரேரணையையும், அதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற பிரேரணையையும் சிபாரிசு செயவதென்றும் அக்கம்மிற்றி முடிவுசெய்துவிட்டது. இதுவிஷயமாகத் திரு. எஸ். நடேசன் அவர்கள் பலமாகஆட்சேபனைசெய்தும் அதுகம்மிற்றியாரின் செவிக்கேறவில்லை. இதன் விளைவாய்த் தமிழ்ப்பேசும் பிரதிநிதிகளெல்லாம ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர். திரு. எஸ். நடேசன் அவர்கள் தமது மந்திரிபதவியையும் இராசிநாமாச்செய்துவிட்டனர். இவ்விதம் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்துவெளியேறியதமிழ்ப் பேசும் எம். பி. களும், ஏனைய தமிழ்ப்பேசும் எம். பி. களுஞ் சேர்ந்து இப்போது மொழிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு தமிழர்ஐக்கிய முன்னணிஒன்றை ஆக்கியிருக்கின்றார்கள். இந்த முன்னணியானது, பல்வேறு அரசியற் கொள்கைகளையுங் கொண்டவர்களின் ஓர் முன்னணியாயிருப்பின் அஃது தமிழரின் அரசியல் ஐக்கியத்துக்குச் சாதகமாயிருக்குமோவென்பதுசந்தேகமே.

அர்ச். இஞ்ஞாசியாரின் கபாலம்

யேசுசபைஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காம் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தகொண்டாட்டங்களை முன்னிட்டு அவரின் திருக்கபாலம் ரோமாபுரியிலிருந்து ஸ்பானிய தேசத்துக்குக் கொண்டுபோகப் பட்டுள்ளது. அது ஸ்பெயினிலே கிறனடா மாகாணத்தினூடாக இராணுவ மரியாதை வேட்டுகளுடன் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பெற்று அங்குள்ள ஆலயம்ஒன்றிலே குவாதிக்ஸ் நகர் மேற்றிராணியாரான அல்வரெஸ்லாரு ஆண்டவரால் ஆடம்பரமாக வரவேற்கப்பட்டது. அப்போது அத்திருப்பண்டத்தை வணங்குவதற்காக அம்மாகாணத்தின் எல்லாப்பகுதிகளிலுமிருந்தே யாத்திரிகர்கள் அங்கு சென்றார்கள். அதனை வணங்குமாறு முதன்முதலாக அதன்முன் முழந்தாட்படியிட்டவர்களில் ஓர்இராணுவ இஞ்ஜினியர்கள் குழுவினரும் அடங்குவார்கள். அர்ச். இஞ்ஞாசியாரின் திருக்கபாலம் ரோமாபுரியிலுள்ள யேசுஎன்னும் ஆலயத்தில் பூசிதமாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது. அங்கே அவர் 1556-ம் ஆண்டு மரணமடைந்தார்.

மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந்தான். கருணையில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசா. யோசேவாஸ்முனிவருக்கு
முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டும்படியாகக் கேட்டுக்
கருதினல் லெர்காரே ஆண்டவர்
பரிசுத்தபிதாவுக்கு அனுப்பிய திருமுகம்

அதிமேற்றிராணியார் மாளிகை, பொலொஞ்ஞா
1 ஆவணி 1955.

மகாபரிசுத்த தந்தையே!

தேவதொண்டர் யோசேவாஸ் முனிவரின் அற்புத வாழ்க்கையையும், புண்ணியங்களையும் சிந்தித்துப் பார்க்கும் போது: "பாவப்பலியாக ஒருவன் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, அவன் சந்ததியைக் காண்பான்; அவன் வாழ்நாளும் அதிகமாகும்" எனுஞ் சொற்கள் பொருத்தமாகக் காணப்படுகின்றன.

அவர் தமது பெருவம்சத்தையும், திரண்டநிதியையும், மற்றும் உலககாரியங்களையும் தரும்பெனஎண்ணி அவற்றை உதறிமிதித்துக் கிறீஸ்துநாதருக்கு ஆத்துமங்களை வென்று கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டார். இதற்காகஅவர் வறிஞருக்கும், வருத்தக்காரருக்கும் நண்பனும், சகோதரனுமாகினர். கொள்ளைநோயினல் நொந்தவருக்கு விசேஷ உதவிசெய்தார்.

இருபத்தினன்கு வருடங்களாக வேதனையையோ, வியர்வையையோ எள்ளளவும் மதியாது இந்தஅப்போஸ்தலிக்கஊழியத்தில் இலங்கைமுழுதும் சுற்றித்திரிந்து உழைத்தார். கிறீஸ்துவவிசுவாசத்தை உறுதிப்படுத்துவதில் இவர் அர்ச். சவேரியாருக்கு ஒப்பிடப்படத்தக்கவர்.

தனிச்சிறப்புவாய்ந்த சிலபுண்ணியங்களால் நிறைந்த இவரை இன்றும்சிலர் வந்தித்துவருகின்றனர்.

பரிசுத்த பிதாவே! தேவதொண்டரான இவரை மோட்சமகிமைக்கு உயர்த்தத் தாங்கள் சித்தங்கொண்டால் இலங்கையிலும், இந்தியாவிலும், இன்னும்பலஇடங்களிலும் தங்கள்செயல் மெச்சப்படுவதுமன்றி உபயோகமானதாயும் இருக்கும். இவரைஅநேகர் தங்கள் முன்மாதிரிகையாகவுங் கொள்வர். திருச்சபையாகிய தாயின் ஒருமனப்பட்ட சகோதரர்களாக இவர்கள் பணிசெய்வார்கள். ஆகவே, இவரின்வாழ்க்கையை விசாரித்து ஆவனசெய்வதற்கேற்ற ஓர்குழுவை நியமிக்கும்படி வேண்டுகின்றோம்.

தங்கள் பாதாரவிந்தங்களைப் பணிந்து தங்கள் அப்போஸ்தலிக்கஆசியையும், ஆசீர்வாதத்தையும் கேட்கிறோம்.

(கையொப்பம்) ஜேம்ஸ் கருதினல் லெர்காரே.

செல்வி ஏ. லோறென்சியாப் பிள்ளையின் சுபமிருத்து

கோண்டாவில், றோ. க. பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. ரி. கே. அமிர்தநாதர்அவர்களினதும், யாழ்ப்பாணம், அர்ச். ஆரோக்கியநாதர் பாடசாலை ஆசிரியை திருமதி பொன்றோஸ் அமிர்தநாதர் அவர்களினதும் சிரேஷ்டபுத்திரியாகிய செல்வி ஏ. லோறென்சியாப் பிள்ளைஎன்பவர் காலஞ்சென்றுசெனும் துயரசெய்தியானதுஎவர்க்குமேபெருங் கவலையைத்தருவதாயிற்று.

இவர் கெடுக்தீவிலே செல்வம், செல்வாக்குநிறைந்த உயர்குடிப்பரம்பரையில்வந்த பெற்றோரின் அருந்தவச் சிரேஷ்ட புத்திரியாக 28-4-30-இல் ஜன்மமானர். தேவபக்தியும், பிறர் சிநேகமும், சாங்கோபாங்க சீவியமும் உடையவராக வளர்ந்து, மரியாயின் சேனைபோன்ற பல பக்திச்சபைகளிற் சேர்ந்து, சிறந்தசேவைசெய்த இவர் எஸ். எஸ். சி. பரீட்சையில் தேறியபின்னர் 19-1-51-இல் கிருக்குடும்பக்கன்னியர்மடத்தில் கவகன்னியாஸ்திரியாகச் சேர்ந்தார். சேர்ந்த சிலமாதங்களின்பின் நோய்வாய்ப்பட்டு, பெற்றோர் இல்லம் திரும்பலானர். ஓரளவு சுகமடைந்தபின்னர் சிலகாலம் ஆசிரியையாகவிருந்து, பின்னர் பயிற்சிபெறும் பொருட்டுக் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிற் சேர்ந்தார். சேர்ந்த மூன்றுமாதத்தின்பின் திரும்பவும் நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம், கொழும்பு, வேலூர், சென்னை முதலாம் இடங்களில் வைத்தியம் செய்வித்தும் குணமுறாது அநேகமாதங்களாக மரணப்படுக்கையில் இருந்துவந்தார்.

மரணப்படுக்கையிலும் தாங்கமுடியாத வருத்தத்தைப் பலரும் பிரமிக்கும்படியாக அமரிக்கையாகவும், சந்தோஷமாகவும அனுபவித்தும், தம்மைக்காண வந்தவர்களுக்கு கல்லுபதேசங்கள்செய்தும் ஆத்துமஇரட்சணிய வேலையில் ஈடுபட்டுவந்தார். ஐம்பது நாட்களுக்குமேல் அன்னஆகாரமின்றித் தெய்வீகளிருந்தாகிய திவ்வியநற் கருணையை மாத்திரம் அருந்திவந்து கடைசியாக இமமாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் இறைவன் திருவடிசேரலாயினர்.

இவரின் பிரேதமானது மறுநாள் பின்னேரம் கொழும்பு, கெடுக்தீவு, இளவாலை, ஊர்காவற்றுறை, மிருசுவில், கிளிநொச்சி முதலாம் இடங்களிலிருந்தும், பட்டணத்தின்பலபாகங்களிலிருந்தும் வந்துகூடிய ஆயிரக்கணக்கான மக்கள் வரிசைவரிசையாகச்செல்ல, ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் தலைமையில் குருப்பிரசாதிகள் எண்மர் துக்கசங்கீதம்பாட, வெண்பரிபூட்டிய இரதத்தில் கொண்டுசென்று, சேமக்காலையிலே புதியகல்லறையில் கல்லடக்கம் செய்யப்படலாயிற்று. அவ்வேளை ஆசிரியகல்லூரி அதிபர் வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்களால் இவரின் புண்ணிய சீவியத்தைப்பற்றி உள்ளமுருக, உணர்ச்சிபெருக, பலரும் கண்ணீர்உகுத்துநிற்க அரிய தோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

இவரின் பிரேத அடக்கத்திற்குத் திருக்குடும்பசபை, கார்மேல்சபைக் கன்னியாஸ்திரிகளும், கொழும்புத்துறை ஆசிரியபயிற்சிக்கல்லூரி ஆசிரியர், மாணவர், மாணவிகளும், பலகல்லூரிகளதும், மிருசுவில், கிளிநொச்சிப் பாடசாலைகளினதும் ஆசிரியரும், மாணவரும், பலபக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், பிறரும் பெருந்திரளாகச் சமுகமளித்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் பிரிவையிட்டு வருந்தும் பெற்றோரோடும், மூன்று சகோதரிகளோடும், இருசகோதரர்களோடும் நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

திவ்வியபூசை காணுவோம்

பொதுவிலே கிறீஸ்துவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்: 1. ஞாயிறு, கடன்திருநாள் மட்டுமன்றி, வாரத்தின் ஏனையநாட்களிலும் பூசைகாணுகிறவர்கள். 2. ஞாயிறு, கடன்திருநாட்களில்மட்டும் பூசைகாணுகிறவர்கள். 3. ஞாயிற்றுக்கிழமைமுதலாய்ப் பூசைக்குப் போகாதவர்கள். இந்த மூன்று வகுப்புகளில் நாமும், நமது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் எந்தவகுப்பைச் சேர்ந்தவர்கள்? இது ஒருமுக்கியமான கேள்வியாகும்.

கிறீஸ்துநாதரின் உண்மையானபிரசைகளாய், ஏன்? அவருடைய பிரமாணிக்கமுள்ள போர்வீரர்களாய் விளங்கவேண்டுமானல் முன்சொன்ன வகுப்புகளுள் முதற்பிரிவைச் சேர்ந்தவர்களாகவே நாமஎல்லோரும் இருக்கவேண்டும். நாம்வேதத்தை அசட்டைசெய்யும்மூன்றாவதுவகுப்பைச் சோதவர்களாய்மாத்திரம் இருந்தால் போதாது. அசமந்தமான கிறீஸ்துவர்கள்என்று சொல்லப்படும் இரண்டாவதுவகுப்பிலும் நாம்நிற்பது, கிறீஸ்துநாதரின் போர்வீரர்என்னும் மகிமையானபெயருக்கு அழகல்ல.

எல்லோரும் தினமும் பூசைக்குப் போக வேண்டுமென்று இங்கேநாம் சொல்லவரவில்லை. குடும்பபாரத்தைக் கொண்டிருப்பவர்களுக்குப் பலவிதமானசிரமங்கள், கஷ்டங்கள் ஏற்படுவதுஇயல்பாகும். இவர்கள்தினமும் பூசைக்குப்போகச் சௌகரியம் இல்லாமலிருக்கலாம். ஆனல், பின்சொல்வது எல்லோருக்கும் சாத்தியமான காரியம். கூடியவரையிலே, குடும்பத்திலுள்ள சிறுவர்சிறுமிகள் வாரத்தில் தினமுமோ அன்றேல்அடிக்கடியோ பூசைகாணப் பெற்றோர்கவனிக்கவேண்டும். ஆனல், தினமும் அல்லதுஅடிக்கடி பூசைகாணமுடியாதவர்கள் பின்வரும் ஆலோசனையைப் பின்பற்றலாம்.

ஞாயிற்றுக்கிழமை பூசைகாணும்போது நமது கடனைச் செலுத்துகிறோம். ஆனல், வாரத்தின் மறுநாட்களில் பூசைகாணும்போதுதான் நமது மனத்தாராளத்தை — உதாரத்துவத்தை எண்பிக்கிறோம். ஆதலால் ஞாயிறுதீங்கலாக வாரத்திலே இன்னொருநாளைக் குறித்துக்கொண்டு, அந்தநாளிலே தவறாமல் பூசைகாண வேண்டுமென்று ஏற்பாடுசெய்துகொள்ளலாம். அல்லது, இன்னநாளெனக் குறிப்பிடாமலே 'வாரத்தில் ஒருநாளாவது பூசைகாணுவேன்' என்று பிரதிக்கினைசெய்துகொள்ளலாம். இதுஎவருமே எளிதாகச்செய்யக்கூடிய காரியம். இதிலும், இடையிடையே வசதிக்குறைவு வராமற்போகாது. ஆனல், அதைத் திவ்வியயேசுவுக்காக நாம் சகித்துமேற்கொள்ளவேண்டும். "சிநேகம் பரித்தியாகத்தை வேண்டிநிற்கின்றது." நாம்யேசுவைச் சிநேகிக்கிறோமென்று காண்பிக்கவேண்டுமானல், பரித்தியாகம் செய்யவேண்டியது அவசியம்.

வண. மத்தேயு கிறுவ்லீசுவாமியார் திருஇருதயஅரசாட்சி, இராஜாதனியாகிய பக்திமுயற்சிகளை உலகமனத்தையும் பரப்புவதற்காக அயராது உழைத்துவந்த அப்போஸ்தலர். "ஞாயிற்றுக்கிழமைபோக, வாரத்தில் குறைந்தது இன்னுமொருநாளாவது தவறாமல் திவ்விய பூசைகாண்பேனென்று பிரதிக்கினைசெய்யுங்கள். திருஇருதய அரசாட்சிநிழலிலுள்ள குடும்பங்கள்ஒவ்வொன்றும் இப்பிரதிக்கினையின்படி நடந்துவருமானல் இதுஎவ்வளவு மேலானகாரியம்" என்றார். இதற்குமேற்கோளாகத் தமதுவாழ்க்கையிலிருந்தே ஒருசம்பவத்தையும் அவர் கூறுகிறார்.

வண. மத்தேயுசுவாமியாரின் தாயார் ஸ்பானியதேசத்தைச்சேர்ந்த பக்தியுள்ள ஓர்உத்தம கத்தோலிக்கமாது. தகப்பனார் ஓர்ஆங்கிலேயர். புறொட்டஸ்தாந்தசமயத்தில் வைராக்கியமான பற்றுதலுடையவர். பெற்றோரிடமிருந்த இத்தமதவேற்றுமை வெகுகாலமாக அக்குடும்பத்திற்குப் பெருங்கவலையாயிருந்தது. மத்தேயுசுவாமியார் குருமடத்திற்குப் போகஅறுமதிக்கும் சமயத்தில்முதலாய் அவரதுதகப்பனார் ஓர்புறொட்டஸ்தாந்தராகவே இருந்தார். இப்படியானஒருவர் மனந்திரும்பக்காரணம் திவ்வியபலிப்பூசையே. மழையோ, வெயிலோ, பனியோ, குளிரோ எதையும்சட்டைபண்ணுதுசுவாமியாரின் பக்தியுள்ளதாயார்தினந்தோறும் திவ்வியபூசைகண்டு தனதுபத்தாவுக்காக ஒப்புக்கொடுப்பாள். இதன்பயனாகவே சுவாமியாரின் தகப்பனார் தமதுவயோதிபத்தில் மனம்திரும்பிக் கத்தோலிக்கரானர். அம்மட்டா! சத்தியவேதத்தில் வெகுபற்றுதலுள்ளவராயும் சீவித்துமரித்தார். இத்தப்புண்ணியவாளரின் மரணத்தையும் ஓர்விசேஷமெனச் சொல்லலாம். ஒருமுதல்வெள்ளிக்கிழமை திவ்விய பூசைநேரத்தில் திவ்வியசற்பிரசாதம் அருந்தியதும், அவர்கோவிலில்தானே திடீரென்று அவஸ்தையாகிப் பாக்கியமானமரணத்தை அடைந்தார். தாய்க்கும், மகனுக்கும் எவ்வளவுஆறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டின் தத்துவ போதகர்

(வண. மைக்கல் பிரான்சிஸ் சுவாமிகள், S. J.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

பிறர்கொடுத்த தொல்லை

தத்துவபோதகர் இவ்வாறு புதுமுறைகளைக் கையாண்டமை சிலருக்குப் பிடிக்கவில்லை. ரோமாபுரிவரைக்கும் முறையீடுகளும், குற்றச்சாட்டுகளுஞ் சென்றன. நித்தியநகரில் இருந்த பெரியவர்கள் சிலர் தத்துவபோதகர் தப்பெண்ணங்களைக் கொண்டுவிட்டாரோவென ஏங்கினர். விசாரணைக்குமேல் விசாரணைநடந்தபின்னர், பன்னிரு ஆண்டுத் தொல்லைநீங்கித் தத்துவபோதகருக்கு மறுபடியும் அமைதிகிடைத்தது. மேலும், அவர் கையாண்டமுறைகள் சரியானவை எனப் பதினைந்தாம் கிறகோரியார்என்ற பாப்பாண்டவர் உறுதிப்படுத்தினர். அவர் மீது குற்றஞ் சாட்டியவர்கள் அவரைப் பகைத்தவர்கள் என்று சொல்லமுடியாது. அவரைப்போல் வருங்காலத்தை ஊடுருவிப்பார்க்கும் அரியஆற்றலும், சூழ்நிலையைக்கடந்து உண்மையுணரும் ஆழ்ந்ததெளிவும் அவர்களுக்கு இல்லாமற் போய்விட்டது — அவ்வளவுதான்.

இடைஞ்சல்கள் நீங்கியதும், தத்துவபோதகர் மதுரையிலிருந்து புறப்பட்டு ஊர்ஊராய்ச் சென்று மக்களை மனந்திருப்பினர். திருச்சி, சேந்தமங்கலம், சேலம், தஞ்சை, கருவூர்முதலிய இடங்களில் உழைத்தார். உடற்கட்டுத் தளர்ந்தபிறகு யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். அங்கிருந்து மயிலாப்பூர்சேர்ந்து சாவை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்.

இலக்கியத் தொண்டு

உணவையும், உடையையும் மாற்றிக்கொண்டதோடு நில்லாமல், தத்துவபோதகர் தமிழ்மக்களின் உள்ளத்தையும் உணர்ந்தார். தமிழ்நன்குகற்றார். வீரமாமுனிவரைப்போல் அவர் செய்யுள் இயற்ற வில்லையென்றாலும், தமிழில் கத்தோலிக்க கொள்கைகளைத் திறமையுடன் எழுதினர். அவர்வரைந்த ஞானோபதேசம் தமிழிலுள்ள ஓர்அரியமறைநூல். இதில் விளக்கப்படாத முக்கிய கத்தோலிக்க கொள்கைஎதுவும் இல்லை எனலாம். இன்னும் அநேகதத்துவநூல்களையும் தமிழில்எழுதினர். தெலுங்கிலும், ஆரியமொழியிலும் இவர் எழுதியபாடல்கள், நூலகளிலசில அழிந்துபோக,சிலவேஉள்ளன. எழுதாணிகொண்டு ஓலையில் எழுதவேண்டியிருந்த அந்நாளில் அவர் அவ்வாறு நூல் எழுதியது அளவிடமுடியாத பெரியதொண்டாகும். தமது எழுத்தாலும், சொல்லாலும் வாழ்வாலும் தமிழரிடையே தாமும்ஒருதமிழரான இவருக்கு இவரது இயற்கைப்பெயரான ரொபேட் தெநொபிலி என்பதற்குப்பதிலாக, தத்துவபோதகர் என்றபெயரே நிலைத்துவிட்டது. மரணவேளையில் அவர் வாய்மூடியபின்னரும், கைஎழுதி ஓய்ந்தபின்னரும், இவர் நூல்கள் உண்மைத்தத்துவத்தைப் போதிக்கின்றன. இச்செல்வங்கள் அழியாமல் நிலைக்கும்வண்ணம் கல்லமுறையில் பதிப்பிக்கப்பெறத் தமிழ்க்கத்தோலிக்கர் ஆவனசெய்யவேண்டும்.

தாம்வீரத்துடன் கடைப்பிடித்த புதியமுறைகளால் அவர் எல்லாருக்கும், எல்லாமாய் — சிறப்பாகத் தமிழருக்குத்தமிழராய் விளங்கினர். இனியும் விளங்குவார். தத்துவபோதகரின் ஞாபகம், நமதுநாட்டின் இலக்கியம், கலை, கலாசாரம் முதலியவை கத்தோலிக்கத்துக்குத் தொண்டாற்றக் காத்துக்கிடக்கின்றன என்பதை இந்த முன்னூறு ஆண்டுகளாக நினைவுறுத்திக்கொண்டே இருந்திருக்கிறது. இனியும் நினைவுறுத்தும்.

பாக்குத்தொடுவாயையும் மன்னர்க்குடாவையும் இணைக்கும் முயற்சி

சேதுசமுத்திரத் திட்டத்தைநிறைவேற்றுவது சாத்தியமா? விரும்பத்தக்கதா? என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்திய அரசாங்கம் ஒரு நிபுணர்கமிற்றியை நியமித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, சேதுபந்தனத்துக்கு (ஆதம்பாலம்) அருகில் ஒருகால்வாய் வெட்டுவதன்மூலம் மன்னர்க்குடாவும், பாக்குத்தொடுவாயும் இணைக்கப்படும். இத்தவேலை முடிந்ததும் தூத்துக்குடித் துறைமுகத்தின் பயன்கள் அதிகரிக்கும். ஆழ்கடற் பிரயாணக்கப்பல்கள் இந்தியாவின் மேற்குக்கரையிலிருந்து கிழக்குக் கரைக்குச்செல்ல இலங்கையைச் சுற்றிக்கொண்டு போகவேண்டிவராது. இந்தியாவின் இருகரைகளுக்கு மிடையேயுள்ள கடற்பாதையின் தூரத்தில் சுமார் 350 மைல் குறையும.

கம்மிற்றி பரிசீலனை செய்யும் விஷயங்கள்:

(1) கடற்பாதையின் தூரம்குறைவதால்—அதாவது உத்தேசத்திலுள்ள சேதுசமுத்திரம்வழியாகக் கப்பல்கள் செல்வதால் கப்பல்களுக்கு எவ்வளவு அனுகூலமுண்டு? கப்பல்கள் நடைமுறையில் இப்பாதையை எவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொள்ளும்?

(2) i. கால்வாய் அமைக்கப்பட்டால், அடுத்தபத்துவருடத்தில் தூத்துக்குடித் துறைமுகத்தின் போக்குவரத்தஅம்சங்கள் எப்படியிருக்கும்? ii. கால்வாய் அமைக்கப்படாவிட்டால் இந்தஅம்சங்கள் எப்படியிருக்கும்?

கம்மிற்றி இம்மாதமுடிவிலே தனது அறிக்கையை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தூத்துக்குடி வர்த்தகசங்கம் வெளியிடும "தூத்துக்குடி வர்த்தகம்" என்னும் சஞ்சிகையில் இத்திட்டத்தைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது வருமாறு:

1902-ம்ஆண்டு தென்னிந்திய புகையிரதக்கம்பெனி பருவகாலக்காற்றுகளைக் கவனத்திற்கொண்டு கடலின் இருபக்கங்களையும் பரிசீலனைசெய்தபின் 60 அடிஆகலமுள்ள ஒருகால்வாயை அமைப்பதற்கானஇடத்தை முடிவாகத் தெரிவுசெய்ததுடன், பாம்பனில் ஒருபுதிய துறைமுகத்தை அமைக்கவும்தீர்மானித்தது. 1921-ம் ஆண்டு சென்னைஅரசாங்க துறைமுக எஞ்சினியர் சேர் ஆர். சி. பிறிஸ்ரோ அவர்கள் இத்திட்டத்தைப்பற்றிச் சமர்ப்பித்த ஒருசிறந்த அறிக்கையில் கூறியதாவது:

கால்வாய் மிகச்சாதாரண உருவத்தில் அமைக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தை மிதமாகமதிப்பிட்டாலும் இது கல்லவருவாய் அளிக்கக்கூடிய திட்டமெனபது தெளிவு. எஞ்ஜினியரிங் கோணத்திலிருந்து திட்டத்தைப்பரிசீலனைசெய்து கால்வாயின் பொதுஅமைப்பையும், அதைஅமைப்பதன் சாத்தியத்தையும் பற்றிக் குறிப்பிடத்தக்கவாறு நிலவும் ஏகமனதானஅபிப்பிராயத்தையும் கவனத்திற் கெடுத்துக்கொண்டால், இது விஷயத்திலும் எவ்விதஅச்சமும் கொள்ளத்தேவையில்லை.

ஆனால், சேர் பிறிஸ்ரோஅவர்கள் கொச்சித்துறைமுக அபிவிருத்திவேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டபோது, இத்திட்டம் கைவிடப்பட்டது. 1945-ம் ஆண்டு துறைமுகத் தொழிற்நுட்பக்கமிற்றி அத்திட்டத்தைக் குறித்து ஆலோசனைசெய்தது. ஆனால், அதுவெற்றிபெறுதென்று கைவிட்டுவிட்டது. ஆனால், 1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபின் இப்பிரச்சினை மீண்டும் முக்கியத்துவம் அடைந்தது. திட்டத்துக்கு ஆதரவாகப் பெருபான்மை அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. உண்மையில் இந்தியாவிலுள்ள சிறிய துறைமுகங்களைப் பரிசீலனைசெய்த திரு. எஸ். கஞ்சண்டையர்அவர்கள் 1951-ம்ஆண்டு தமது அறிக்கையில் கூறியதாவது:

மன்னர்வளைகுடாவைப் பாக்குத்தொடுவாயுடன் பாம்பன்கால்வாய் இணைக்கின்றது. தனுஷ்கோடிக்குச் செல்லும் புகையிரதப்பாதை 220 அடி ஆழமுள்ள ஒருசிறந்த பகுதியைக் கொண்டநீண்டபாலத்தின்மூலம் பாம்பன்கால்வாயைக் கடந்துசெல்கின்றது. முக்கியமாகப் பாலத்தின்தென்பகுதியிலும், மண்டபத்துக்கருகிலும் வண்டல்மண் தங்கியதால் இந்த ஆழம் மறைந்தது. கேந்திரகோணத்திலிருந்தும், கடற்படைக் கோணத்திலிருந்தும் பார்க்கும்போது இத்தத்தூரம் குறைந்ததன்மூக்கியத்துவம் இந்தியா சுதந்திரமடைந்தபின் மேலும் அதிகரித்துள்ளது.

2000 தொன்னுக்கு மேற்படாத நிறையுள்ளகப்பல்கள் பாம்பன்கால்வாயை உபயோகிப்பதற்கு வசதிசெய்யும்நோக்கத்துடன் சென்னைஅரசாங்கம் 1945-ம் ஆண்டு வெளியிட்ட தனது யுத்தபிற்கால அபிவிருத்தித் திட்டங்களில் பாம்பன்கால்வாயை 20 அடி ஆழமாக்க வேண்டுமென்று யோசனை கூறியுள்ளது.

வழுக்கைத்தலைக்குத் தைலம்

கிறீஸ்காட்டிலே ஆர்த்தாஎன்றசிறுபட்டினத்தில் கன்ஸ்ரன்சைன் என்றபாடசாலைஆசிரியர்ஒருவர் இருந்துவருகிறார். இவருக்குவயது எழுபதாகிறது. இவர் தலையின் வழுக்கையைப்போக்கவெண்மையான தைலம்ஒன்றைச்செய்திருக்கின்றார். காண்குமாதகாலம் இந்தத்தைலத்தை விடாமல் உபயோகித்தவந்தால் உரோமம் உதிர்ந்துபோவது நின்றுவிடும். அப்பால் பதினைந்துமாதங்களில் மயிர்வளரத் தொடங்கிவிடும். தாம்செய்துள்ள இந்தத்தைலத்தை அந்நாட்டின் உடலியல்ஆராய்ச்சிக் குழுவினரிடம் சமர்ப்பிப்பதற்காக இவர் தற்போது அதென்ஸ்நகர் சென்றிருக்கிறார் ஆறுவிதமான மூலிகைகள்கொண்டு இத்தைலம் தயாரிக்கப்படுகிறது. இதைச்செய்ய இரண்டுமூன்றுமணி நேரமே பிடிக்கிறதாம். இம் மூலிகைகளின் பெயர் அவரதுகுடும்பத்திலே தலைமுறைதலைமுறையாகப் பரம இரகசியமாய் இருந்துவந்ததாம்.

* * *

● சுவிற்சர்லாந்திலுள்ள அர்ச். கிளாவர் இராயப்பரின் சேவாசபையானது ஆபிரிக்கமிஷன்காடுகளுக்குத்தான் தொண்டாற்றதொடங்கிய ஐம்பதாம்வருட நிறைவுவிழாவைச் சமீபத்திலே கொண்டாடியிருக்கிறது. இதுவரை அநேகநாடுகளில் பரந்துள்ள இச்சபையானது ஏறக்குறைய 200 ஆபிரிக்கபாஷைகளிலே 30 லட்சம் புத்தகங்களுக்குமேல் அச்சிட்டு வழங்கியிருக்கின்றது.

❋ எகிப்திலே அதிகம் நன்றாக அறியப்பட்ட பிரமிட் கட்டடங்கள் எங்கேயிருக்கிறது?

கெய்ரோநகருக்குவடக்கே சிலமைல் தூரத்திலுள்ள ஜிசெனாமிடத்தில் தான் இருக்கின்றது. இதுபதினொரு பிரமிட்களை அடக்கியிருக்கின்றது. இவற்றில் மிகப்பெரியதும், மிகப்பொலிவானதும் சியொப்ஸ்என்பதே. இது 450 அடி உயரமுள்ளது. 80 கோடிகனஅடி சிற்பவேலையையும், உள்ளே அநேக கட்டடங்களையும் அடக்கியுள்ளது.

❋ உலகின் மூன்றுவது அதிசயமாக எகிப்திலுள்ள பிரமிட்ஸ்எனப்படும் கூர்நுதிக்கோபுரங்கள் எதற்காக அமைக்கப்பட்டன?

மரணத்திரையில் மறைந்துபோன எகிப்தியமன்னர்கள், அல்லது பிரபலஸ்தர்களின்ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டன.

❋ தற்போது எத்தனை பிரமிட்கள் எஞ்சிநிலைத்திருக்கின்றன?

கி. மு. 4000-ம்ஆண்டுக்கும், 2000-ம் ஆண்டுக்குமிடையில் அமைக்கப்பட்ட இந்தப் பிரமிட்களில் இன்னும் 40 வரையில்தான் எஞ்சியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலபந்தம்

அன்றாடவாழ்க்கையில் சாதாரணமாகச்சனங்கள் பாதிக்கப்படும் நோய்களில்ஒன்று மலச்சிக்கல். இதைக் குணப்படுத்தப் பலரும் பலவிதமுறைகளைக் கையாளுகின்றனர். இவற்றாலே பல நோயைஆதிகப்படுத்தி உடலுக்குத் தீங்குசெய்வனவாய் இருக்கின்றன. சரியான இயற்கைவழிகளால் இதைக் குணப்படுத்துவதுபற்றி நாம் அறிந்திருப்பது நலம்.

பழங்கள், காய்கறிகள், முழுத்தானியங்கள் முதலியவற்றைப் போதியஅளவில்சேர்த்து, இயற்கையின்விதிப்படி வாழ்க்கைநடத்துபவர்கள் அரிதாகமாக இந்நோயால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், மாமிசஉணவு, ஊறுகாய்இவற்றுடன் கொழுப்புமனிறைந்த உணவுவகைகளைஉண்டு, தகுந்தஉடற்பயிற்சியில்லாதநாகரீகவாழ்க்கை நடத்துபவரைத்தான் இதுபீடிக்கின்றது

இந்நோய் இருவகையாக நேரலாம். தகுந்தஉடற்பயிற்சி இல்லாது இருந்த இரையிலேயே வேலைசெய்பவர்களுக்குக் குடலின்தசைகள் பலவீனம் அடைவதால் கழிவுப்பொருட்களை வெளியேற்றும்சக்தியை இழந்துபோவது (atonic constipation) ஒன்று. வெடிவெடிப்பான குணம்உடையவர்களுக்கு நரம்புகள் அதிர்ச்சிபெற்றுக் குடல் ஒடுக்கம்அடைவதால் ஏற்படுவது மற்றொன்று.

நாம் உண்ணும்உணவானது வாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல இவைகளில்சுரக்கும் சீரணநீர்களால் சீரணிக்கப்பட்டுக் குடலின் இரத்தக் குழாய்களால் உறிஞ்சப்பட்டபின் 26 மணிநேரங்கழித்து வெளியேறுகின்றது. இவ்விதம் வெளியேறுவதில் தடைஏற்பட்டால் புரதப்பொருட்கள் உடலில் தேங்கி அழுகவும், மாப்பொருட்கள் புளிப்படைந்து வாயுஉற்பத்தியாகவும் நேரிடுகின்றது. அதனால் நமதுஉடம்பில் விஷம்ஏறுகிறது. மலச்சிக்கல்ஏற்படுவதால் மூலியும், நரம்பு மண்டலமும் மந்தநிலை அடைகின்றன. தலைவலி, வயிற்றுவலி, நரம்புவலி, பலவித தோல்வியாதிகள், கல்லீரல், பித்தப்பைசம்பந்தமான தொல்லைகளும் ஏற்படுகின்றன.

மலபந்தம்ஏற்படும் காரணங்கள்

நமதுகுடல் அடிக்கடி கீழ்ப்புறமாக அசையும் தன்மைஉள்ளது. இவ்விதஓர்பலத்தஅசைவு ஏற்படும்போதுதான் கழிவுப்பொருட்கள் வெளியேறுகின்றன. குடற்சுவரிலுள்ள நரம்புகள் இந்தஉணர்ச்சியை மூளைக்குத்தெரிவிக்கின்றன. இந்தஇயற்கையின் உணர்ச்சியை அலட்சியஞ்செய்துவந்தால், நாளடைவிலே நரம்புகள் அதை மூளைக்குத் தெரியப்படுத்தஇயலாதநிலையைஅடைந்து, மலச்சிக்கல்ஏற்படுகிறது.

பால், இறைச்சி, மீன், முட்டை, தவிடுநீக்கிய தானியங்கள் இவற்றை மாத்திரம் மிகுதியாக உண்டுவருவதாலும் மலச்சிக்கல் ஏற்படும். ஏனெனில், இவைமுற்றிலும் சீரணமாக்கப்பட்டுக் குடலால்உறிஞ்சப்பட்டு விடுகின்றன. தடன் இயற்கையான கழிவுநீக்கம் தடைப்பட்டு மருந்துசாப்பிட்டால் தான் பேதிகழியும்நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. முத்தெண்ணெய் அடிக்கடி சாப்பிடுவதால் பேதி இறுக்கம்அடையலாம். ஏனெனில், இதற்குப் பேதியை இறுக்கும் குணமும்உண்டு.

நடுக்கும் வழிகள்

காய்கறிகள், முழுத்தானியங்கள், பழங்கள், கீரைஆதியவற்றில் செல்லுலோஸ்என்ற சீரணிக்கப்படமுடியாத ஓர்பொருள் இருக்கின்றது. இவற்றை மிகுதியாய்ச் சாப்பிட்டுவந்தால், இந்தச் சீரணமாக்கப்படாத பொருளுடன் கழிவுப்பொருட்களும் வெளியேறமுடிகின்றது. இதனால்தான் நம்மூதாதையர் கீரைவகைகள் மலச்சிக்கலுக்கு நல்லதுஎன்பதை அறிந்திருந்தார்கள். மேலும், பழங்களிலிருக்கும் மென்மையும், இனிமையுமான புளிப்புச்சத்தானதுகுடலின்சீரணநீர்கள்தகுந்தஅளவு சுரப்பதற்கும், உணவு குடலில்அழுகாதபடி தடுப்பதற்கும் உதவுவதுடன், மலச்சிக்கல்ஏற்படாமல் தடுப்பதற்கும் இயற்கையின் சிறந்தமருந்தாக இருக்கின்றது.

தகுந்த உடற்பயிற்சி வேண்டும். இதைஆங்கிலத்தில் (Have Motion and you Shall Have Motion) என்றவாக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. நமது அடிக்குடலின்கீழ் சோஸ்என்றதசை அமைந்திருக்கின்றது. நாம் நடக்கும்பொழுது இத்தசை அசைவுற்று, வலிமையடைந்து, குடலின் தசைகளுக்கும் ஊக்கம் கொடுத்து இக்நோய்ஏற்படாமல் தடுக்கின்றது. யோகஆசனங்கள் இத்தசைகளுக்கு வலிவுகொடுப்பதால் இயல்பாகவே மலபந்தம்நீக்கும் சிறந்தபயிற்சிகளாக அமைந்துள்ளன.

குறிக்கப்பட்டசமயத்தில் காலைக்கடனை முடிக்கும்வழக்கம் மிகவும்பலன்தரும். இதற்கு ஏற்றநேரம் காலை ஆகாரத்துக்குப் பின்என்று வைத்தியர் ஒன்றுபடக் கூறுகின்றனர். ஆனால், இது உடலுக்குக் கெடுதிஎன்று தவறாகச் சிலர்எண்ணுகின்றனர். ஆகாரம் உட்கொண்டபின் குடல் தனதுஅசைவை அதிகமாகப்பெற்று, எளிதில் கழிவுப்பொருள் அகற்றப்பட உதவுகின்றது.

நமதுகுடல் போதிய அசைவுபெற்று இயற்கையாகத் தனதுதொழிலைப் புரிய ஓர் அளவு தண்ணீர் தேவை. நாம் போதுமானநீர் அருந்துவது நல்லபயன்ஏற்படுத்தும். இரவு படுக்கைக்குப்போகுமுன்னும், காலையிலும் ஒருகிளாஸ்தண்ணீரில் அரைஎலுமிச்சம் பழச்சாறுவிட்டு அருந்திவருவது நல்லது. கல்லீரல், பித்தப்பை, சுரப்பிகள் இவற்றின்தொழிலில் ஒழுங்கீனம்ஏற்பட்டாலும் அல்லது சிலசமயங்களில் குடலில்கட்டி, அடைப்பு, புற்றுமுதலியன இருந்தாலும் நாட்பட்ட மலச்சிக்கல்ஏற்படலாம். இதற்கு வைத்தியரின்ஆலோசனை உடனேதேவை.

சிகிச்சை

(1) மனோதத்துவவிதிப்படி வியாதியைப்பற்றிய சரியான அறிவுரைகள் கொடுக்கப்படுவதோடு இதைப்பற்றிய தப்பெண்ணங்கள் மனதிலிருந்து அகற்றப்படவேண்டும்.

(2) மலச்சிக்கல் ஏற்பட்டதின் காரணத்தைஆராய்ந்து அதைத் திருத்தவேண்டும்.

(3) காய்கறிகள், பழங்கள், கீரைகள்முதலியவற்றைத் தாராளமாய் உண்ணவேண்டும்.

(4) ஒருநாளைக்கு 8முதல் 10 கிளாஸ்தண்ணீர் (பழரசங்கள்உட்பட) அருந்தவேண்டும்.

(5) ஓர்குறிப்பிட்ட சமயத்தில் (காலைஆகாரத்துக்குப்பின் நல்லது) ஒழுங்காகக் காலைக்கடனை முடிக்கவேண்டும்.

(6) கூடியமட்டும் மருந்துகள்உபயோகியாமல் இருக்கவேண்டும்.

(7) விற்றமின் B மாத்திரைகளையும், முழுத்தானியங்களையும் (தவிடுநீக்கப்படாதது) உண்ணவேண்டும்.

(8) வெடிவெடிப்பான மனோநிலையை மாற்றிஅமைத்துக்கொள்ள வேண்டும்.

(9) போதுமானநித்திரை, சிறந்தகாற்றோட்டத்தில் உடற்பயிற்சிமுதலியவை அத்தியாவசியம்.

(10) நாட்பட்ட மலச்சிக்கலால் அவதிப்படுவோர்,செனோகொட்(Senokot) என்றமருந்தைச் சிலகாள் தொடர்ந்து பாவித்துவரவேண்டும். இதைஉபயோகித்தால் குடலுக்குக்கெடுதி இல்லாதமுறையில் நல்லபலன்ஏற்படுகின்றது.

— ஞானதூதன்

புதிய பாடசாலைத் திறப்புவிழா

அளம்பில்கிராமத்திற்குச் சென்ற 16-1-56 திங்கட்கிழமை ஓர்சுபதினமாகும். அன்றுகாலை பாடசாலைச் சிறுமரும், ஆசிரியரும், ஊரவரும், அயற்கிராமச் சைவமக்களும் கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களையும், மூலஸ்தீவுக் காரியாதிகாரி திரு. சேவியர் செலவத் தம்புதம்பதிகளையும் இங்குகட்டப் பெற்ற புதியபாடசாலைமுன் மாலைகள் சூட்டி வரவேற்றார்கள். பின்னர் வண. கட்டளைக்குரவர் பாடசாலையை ஆசீர்வதிக்க, திருமதி செல்வத்தம்பு அதனைத் திறந்துவைத்தார்.

அதன்மேல் காரியாதிகாரிஅவர்கள் தலைமைதாங்கப் பாடசாலைச்சிறுவர்கள் இனியகீதங்கள்படித்துச் சபையோரை மகிழ்வித்தனர். பின்னர் முறையே காரியாதிகாரி, கரிக்கட்டுமூலைதெற்குக் கிராமச்சங்கதலைவரும், கோயிலமூப்பருமாகிய திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை, கரிக்கட்டுமூலைதெற்கு உடையார் திரு. எவ். ஏ. பொஞ்ஞைடோ, தலைமைஆசிரியர் திரு. ஆர். பாக்கியநாதர், இளைப்பாறியஆசிரியர் திரு. எஸ். யேசுதாசன் எனபவர்கள் பேசியபோது: பலவருடங்களாக மணல்கொட்டிலாகக் காட்சியளித்தபாடசாலை இப்போது அழகியவிசாலமான கற்கட்டிடமாய், ஆசிரியரின்வாசஸ்தானம், பெரியவிளையாட்டுமைதானம், தோட்டநிலம் ஆகியவற்றுடன்கூடியதாய் விளங்குவதற்குக் காணிஉபகரித்த ஊர்ப்பெரியார்களையும், பணஉதவியளித்த மேற்றிராணியாண்டவர்அவர்களையும், அப்பண உதவிகொண்டு இப்பெரியபாடசாலையைக் கட்டிமுடித்த கட்டளைக்குரவரின் காரியதிறமையையும், பாடசாலை முன்னேற்றத்தில் தலைமைஆசிரியரின் ஊக்கத்தையும் பாராட்டி நன்றிதெரிவித்துநின்றார்கள்.

காரியாதிகாரிஅவர்கள் பேசியபோது: "அரசாங்கம் தற்போது கிராமவாசிகட்குப் புரிந்துவரும்உதவிகள் தொடர்ந்து கிடைக்குமெனஎண்ணுது காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து கிராமமக்கள் தங்கள் பொருளாதாரத்தை வளம்படுத்த முன்வரவேண்டும்" என்றும், கிராமச்சங்க தலைவர்அவர்கள் பேசியபோது: "ஓர் ஊரின் முன்னேற்றம் பாடசாலையிற் தங்கியுள்ளது; பாடசாலைமுன்னேற்றம் சிறப்பாக ஆசிரியரிலும், பொதுவாக ஊரவர்களிலும் தங்கியுள்ளது என்பதை இத்திறப்புவிழாஎடுத்துக்காட்டுகிறது" என்றும், உடையார் அவர்கள் பேசியபோது: "அரசாங்கபாடசாலைகளிலும், பலபிறபாடசாலைகளிலும் போதியசமயக்கல்வி ஆளிக்கப்பெறுமையால் சமூகநல்லொழுக்கவாழ்வு பெரிதுங்கெட்டுவரும் இக்காலத்திலே மகாவக். மேற்றிராணியாண்டவர்அவர்கள் எதிர்காலத்தில் சனப்புழக்கம் மிக்குவிளங்கப்போகும் வன்னிப்பிரதேசத்திற் சற்சமய உணர்ச்சியுள்ள சமுதாயத்தை உருவாக்க உறுதியான தமிழ்ப்பாடசாலைக்கட்டடங்களை நிறுவிவருவது வரவேற்கக்கூடிய செயலாகும்; இதற்கு நாம் அவரை வாழ்த்துவோமாக" என்றும் கூறியமை குறிப்பிடத்தக்கது.

ஈற்றில் வண. கட்டளைக்குரவர் எழுந்து மிகமேலான இந்தஉதவியைச் செய்தருளிய மேற்றிராணிஆண்டவருக்கும், இம்முயற்சியில் விசேஷவிதமாக ஒத்துழைத்த கோவிற்கணக்கருக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றவர்கட்கும் நன்றிகூறி ஆசியருளினர்.

— நிருபர்

புத்தக மதிப்புரை

பயிலுந்தமிழ்ப் பயிற்சி

ஆரும் வகுப்பு

ஆக்கியோன்: P. S. ஞானப்பிரகாசம்
பிரசுரம்: ஸ்ரீலங்கா அச்சகம்
விலை: ரூபா 1-25

'பயிலுந்தமிழ்ப் பயிற்சி' என்ற தொடர்நூல்வரிசையில் ஆரும்வகுப்புப் பாஷைப் பாடபுத்தகமாக வெளிவரும் இந்நூல் வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்தைப் பூரணமாக அடக்கியதாயுள்ளது. இன்னும் மேற்றரவகுப்புக்களிலே உரைநடையாக்கம், சுருக்கம் எழுதுதல் ஆகியாம் அப்பியாசங்களைத் திருத்தமாகச் செய்தற்கேற்றவகையில் மாணவரை முன்னுயத்தஞ் செய்விக்கத் தக்கதான பலதிறப்பட்ட பாஷைப் பயிற்சிகளை அடக்கியதாயிருக்கின்றது.

இதன்கண் எழுத்து, சொல்லாக்கம், சொல், சொற்றொடர், புணர்ச்சி, வாக்கியம், கதை, கட்டுரை, கடிதம், விரகித்தல், செய்யுட்பொருள் எழுதுதல் என்ற அமிசங்களைவிளக்கும் 66பாடங்கள் உள்ளன. கட்டுரைப்பகுதியை வரலாற்றுக் கட்டுரை, வர்ணனைக்கட்டுரை, விளக்கக்கட்டுரை, சுயசரிதம் என நாலுகூறுகப்பகுத்து அவற்றிற்குத் தனித்தனியே மாதிரிகைக் கட்டுரையும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் ஆசிரியர்க்குதவியாக வாரவேலைத்திட்டமும் காட்டப்பட்டுள்ளது. சுருக்கமாகக்கூறின் இந்நூல் ஆசிரியரது முயற்சியை மிகவும் இலகுப்படுத்துவதோடு, மாணவருக்கு இலக்கண அறிவையும், மொழிவளத்தையும், எழுத்துவன்மையையும் ஒருங்கே கைவரச்செய்யும் சிறந்தகைந்நூலாகுமென்பதற் கையமில்லை.

எமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவில், பெரியசந்தானுள் நாயகியின் பங்குனி மகோற்சவம்

பங்குனி

7-ந் திகதியும்—10-ந் திகதியும்

3-3-56 — கொடியேற்றம். மாலை 6-30 மணிக்கு நவநாள் ஆரம்பம்.

6-3-56 — பொண்ணிவிக்கல் வெஸ்பேர்ஸ் மாலை 6-30 மணிக்கு.

7-3-56 — முதலாம் திருநாள். காலை 7-30மணிக்குப் பாடற்பூசை.

9-3-56 — மாலை 6-30மணிக்குப் பொண்ணிவிக்கல் வெஸ்பேர்ஸ்.

10-3-56 — பெரிய திருநாள். காலை 7-30 மணிக்குப் பாடற்பூசை.

வாடிவீடு வேண்டியவர்களும், "கார்ப் பாக்கில்" மோட்டார்வண்டிகளின் பாது காப்புக்காகக் கொட்டில்கள் அமைக்க விரும்பியவர்களும், மாசிமாதம் 20-ந்திக திக்குமுன் பரிபாலகர் சுவாமியாருக்குப் பணத்தைஅனுப்பி ஒழுங்குசெய்துகொள் ளவேண்டும். இறுதிவரை காத்திருந்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

இறைச்சி, மரக்கறி, தேநீர், குளிர்ந்த பானக் கடைகள்தவிர மற்றெல்லாக்கடை களும் ஆராதனைவேளைகளில் மூடப்பட் டிருக்கவேண்டும்.

வண. ஆர்தர் மாட்டின் பெர்ணண்டோ,
பரிபாலகர் சுவாமியார்

ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the estate of the late Joseph Ferdinand of Jaffna Town.

Deceased.

Testamentary Jurisdiction No. 86.

Arokiam widow of Joseph Ferdinand of Jaffna Town.

Petitioner.

Vs.

1. Wilfred Ferdinand
minor 2. Alfred Ferdinand
do 3. Philip Ferdinand
do 4. Stella Ferdinand and
do 5. Rubert Ferdinand all of Jaffna Town.

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skanda Rajah, Esquire, District Judge, Jaffna on the 23rd day of September, 1955 in the presence of Mr. V. A. Moses, Proctor for the petitioner and the affidavit of the petitioner dated 30th day of April 1955 having been read:

It is ordered that the abovenamed 1st respondent be appointed guardian ad litem of the minors the 2nd to 5th respondents and that the petitioner is declared entitled to have letters of administration of the estate of the abovenamed deceased and the same issued to her accordingly unless the respondents or others interested shall on or before the 31st day of October 1955 appear before thisCourt and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 23rd day of September 1955.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

31-10-55

Time to show cause to the contrary is extended to 28-11-55.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

28-11-55

Time to show cause to the contrary is extended to 13-2-56.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

கலண்டர்

"சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகை விற்பனையாளரால் விநியோகிக்கப்படும் எமது சந்தா தாரர் சகலருக்கும் சென்றவாரப் பத்திரிகையுள் ஒவ்வோர் கலண் டர்வைத்து அனுப்பியுள்ளோம். எனையவர்களுக்கு இம்முறை அனுப்பியிருக்கிறோம்.

அதிபர்,
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

செல்லமாய் வளர்த்த வாத்து

இங்கிலாந்திலே பிறெஸ்ரன் நகர் அர்ச். ஹிறகோரியாரின்கோவில் விசா ரணைக்குரவரான வண. பி. ஜே. டன் சுவாமியார் தாம் செல்லமாய்வளர்த்த விக்றர்என்றவாத்து சென்றகிறிஸ்மஸ் அன்று இறந்தகாரணமாக ஏற்பட்ட கவலை இன்னுமே நீங்கியவரா யில்லை யாம். இத்தவாத்து அப்பங்குவிசார ணைக் கிறீஸ்துவர்கள் எல்லோராலும் மாத்திரமல்ல, ஆனால், அந்நகர்முழு வதுமே நன்கு அறியப்பட்டதாகும். இது இற்றைக்குப் பன்னிருவருடங்க ளின்முன் சுவாமியாரால் வாங்கப்பட் டது. அதிகமதிகம் பட்சமுள்ளதாய் இதுவளர்ந்தமையால் யுத்தத்தில் ஆடைந்த விக்றரி — அதாவது வெற் றியிலிருந்து இதற்கு விக்றர் என்று பெயரிடப்பட்டது. இத்தவிக்றர் ஒவ் வோர்இரவும் குருமனைக் கதவின் அருகே காவலிலிருந்தும். தனதுஎச மான் நாளாந்த கடமைச்செபங்களைச் சொல்லிக்கொண்டு உலாவும்போது எப்போதும் அவருடன் செல்லும். குருமனைக்குமேலாக அடிக்கடி அது பறக்குங்காட்சி மனேகரகாட்சியா யிருக்குமாம். அதன் பொலிவான தோற்றமும், பழக்கங்களும் அத்துணை விசேஷப்பட்டனவாய் இருந்தமை யால் தேசியப்பத்திரிகைகளிலும், உலக பத்திரிகைகளிலும் அதன்பெயர் அடி பட்டுவரலாயிற்று.

● சென்ற 1955-ம் ஆண்டிலே மற்றெந்தநாட்டைக்காட்டிலும் அயர் லாந்திலிருந்து லூர்து திருப்பதிக்கு அதிகமானயாத்திரிகர்கள் ஆகாயவிமா னங்களில் சென்றிருக்கின்றார்கள். இவர்களேஏற்றிச்சென்ற ஜெற் விமா னங்களாய் எல்லாமாக 6,746 யாத்திரி கர்களே ஏற்றிச்சென்று லூர்துபதிக் குச்சமீபமான தார்ப்ஸ்விமானநிலையத் தில் 332 முறை இறங்கியிருக்கின்றன.

* * *

● யேசுசபையை அடியிட்டவ ரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காம்தூற்றாண்டு ஞாபகார்த்தமாக ஸ்பானியஅரசாங்கம் மூன்றுஇனமான தபால்முத்திரை களைப் பாவனைக்கு விடுத்திருக்கின்றது. இந்தமுத்திரைகளிலே அவரின் சிர மானது அவாதமுன்னோர்கள் வசித் திருந்தமனையின் நிழலிடத்திலே காட்சியளிக்கின்றது.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அடியான் சதாசகாய மாதாவையும், அர்ச். அந்தோனியாரையும் கேட்டுக் கொண்டகாரியம் அனுகூலமானதற்கு நன்றியறிதலாக இதைப்பிரசுரிக்கிறேன்.

காங்கேசன்துறை — Co. மரியதாஸ்.

அரசியல் வானம்

தற்போது பாராளுமன்ற சனப்பிரதி நிதிகள்சபையிலே மத்துகாமப்பிரதிநிதி யாய் இருந்துவருகிறவரான திரு. வில் மட் ஏ. பெரேரா அவர்கள் வரப்போ கும் பொதுத்தேர்தலிலே மத்துகாம ஸ்தானத்துக்குப் போட்டியிடப் போவ தில்லையெனத் தெரிவித்திருக்கின்றார். ஆயினும்இவர் அரசியலிலிருந்து விலக வில்லை. ஏனெனில், இன்னும் இரண்டு வருடகாலத்தில் நடந்தேறுமென இவர் முன்னதாகஉணர்ந்து எதிர்பார்க் கின்ற அடுத்த பொதுத்தேர்தலிலே திரும்பவும்அந்தஸ்தானத்துக்குப் போட்டியிட எண்ணுகின்றார். இவர் 1947-ம்ஆண்டு பாராளுமன்ற அரசிய லில்பிரவேசித்து அப்போதுநடை பெற்ற பொதுத்தேர்தலிலே இலவசக் கல்வியின் வீரர்திலகமான முன்னாள் கல்விமந்திரியார் சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களைத் தோற்கடித் தவர். சென்றபொதுத்தேர்தலிலே யு. என். பி. அபேட்சகராக திரு. டி. டி. ஆதுலாத்முதலி அவர்களே இரண் டாயிரத்துக்குமேற்பட்ட வாக்குகளா லே தோல்வியுற்றச்செய்தவர். இவர் எண்ணுகிறபடி, இன்னும் இரண்டு வருடகாலத்தில் மற்றோர்பொதுத்தேர் தல் கடைபெறுமா?

களனியில்கூடும்மகாநாடு

ஐக்கிய தேசியக்கட்சி (யு. என். பி.) யினநிர்வாகசபை அடுத்தபொதுத்தேர் தலிலே வடமாகாணத்திலும், கீழ்மா காணத்திலுமுள்ள 16 ஸ்தானங்களும் நீங்கலாக 73 தொகுதிகளுக்குத் தனது அபேட்சகர்களைநிறுத்தத் தீர் மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. ஒரேயொரு உத்தியோகபாஷையாகச் சிங்களத்தைப் பிரகடனஞ்செய்யத் தக்கதாக அரசியல்அமைப்பைத் திருத்துவதற்குப் போதிய தொகை யான பிரதிநிதிகள் இருக்கத்தக்கதாய்த் தனதுஅபேட்சகர்களை ஆதரித்துப் பிரதிநிதிகளாகத் தெரிந்தனுப்புமாறு கேட்டுக்கொள்வதே அதன் தேர்தற் சுலோகமாயிருக்கும். அரசியல் அமைப்பிலே எந்தவொருதிருத்தமும் செய்யத்தக்கதாய் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைவாக்குகள் தேவைப்படும். தற்போதைய பாராளு மன்றத்திலே 101 பிரதிநிதிகள் இருந்து வருகிறார்கள். புதிய பாராளுமன்றத் திலே இந்தியர்கள், பாகிஸ்தானியர் களாய்ப் பதிவுசெய்யப்பெற்ற வாக்கா ளர்களுக்கென மேலும் நான்குஸ்தா னங்கள் கூடுதலாகவிருக்கும். அதனால் அடுத்தபொதுத் தேர்தலின்பின் வரப் போகும்அரசாங்கம் அரசியல்அமைப் பைத் திருத்துகிறதானால் 70 பிரதிநிதி களின் ஆதரவைப்பெறவேண்டியிருக் கும்.

மாசி 18-ந் திகதி

ஒரேயொரு உத்தியோகபாஷையா கச்சிங்களத்தையே ஆக்கத்தீர்மானிக்க வேண்டும், அதனை உடனேதானே நிறைவேற்றிவைப்பதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தூண்டித் திரு. டி. சி. டபிள்யு. கன் னங்காரா என்பார் கொண்டுவந்துள்ள பிரேரணை வருகிற மார்சி மாதம் 18-ந்திகதியன்று களனியில்கூடவிருக் கும் ஐக்கியதேசியக்கட்சியின் வருடாந் தமகாநாட்டில் எடுத்தாளப்படவிருக்கி றது. இந்தப்பிரேரணைபற்றிக் கலந்து விவாதிப்பதற்கென ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகசபை கான்குமணிநேர அவகாசங்கொடுக்கத் தீர்மானித்திருக் கிறது.

45 அபேட்சகர்கள்

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண் டாரநாயக அவர்களைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அடுத்த பொதுத்தேர்தலிலே 45 அபேட்சகர்கள் வரையில் நிறுத்தும் போல் இருக்கிறது. அதனால் தோற்க அக்கு அபேட்சகர்களாக மூன்வர விரும்பும் அபேட்சகர்களையெல்லாம் அக்கட்சியின் தலைமை ஸ்தானத்தில கூடவிருக்கும் மகாநாட்டுக்குச் சமுக மளிக்கும்படியாக அவர்கேட்டிருக்கின் றார்.

நீர்கொழும்பு ஸ்தானம்

பாராளுமன்றத்திலே நீர்கொழும்பு ஸ்தானத்துக்கு ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகராகத் தற்போது காலிடிஸ் திறிக் நீதிபதியாய் இருந்துவருகிறவ ரான திரு. ரி. குவெனரின் பெர்ணண் டோ அவர்கள் போட்டியிடுவார்போல் தெரிகிறது. அவரும் அடுத்தவாரத்தி லே தமது உத்தியோக பதவியிலிருந்து இளைப்பாறுவார்போல் இருக்கிறது.

மதுவிலக்கு இயக்கம்

முன்னாள்பிரதமர் திரு. டட்லி சேனநாயக அவர்கள் தலைமையிலே பிறந்துள்ள மதுவிலக்குஇயக்கம் இம் மாதம் 17-ந்திகதிமுதல் பொதுத்தேர் தல் முடிகிறவரையிலே நிறுத்திவைக் கப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகள் தங்களுக்குச்சாதகமாக மதுவிலக்குக் கூட்டங்களைப் பயன்படுத்திக்கொள் ளாது தடுக்குமாறே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர்தெரிவித் திருக்கிறார்.

இரண்டு தொகுதிகளிலும்

களனித்தொகுதிக்குப் போட்டியிடு கின்ற திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர் களும், திரு. ஆர். ஜி. சேனநாயக அவர்களும் அன்றுஒரேநாளில் அங்கு இருகூட்டங்கள் நடத்தினார்கள். திரு. ஆர். ஜி. அவர்களின்நோக்கம் களனித் தொகுதியிலிருந்து திரு. ஜே. ஆர். அவர்களைக்கிளப்பி வெளியேற்றிவிடுவ தும், அதேகாலத்திற்றானே தாம்இப் போது வசித்திருக்கும் தம்பதெனியா ஸ்தானத்தைத் தமக்கு நிச்சயப்படுத் திக்கொள்வதுமாம். இரண்டுதொகுதி களிலும் இவர்வெற்றிபெற்றால் பிந்த அவற்றில்ஒன்றை இராசிராமாச்செய்து விடவேண்டியவர். அதனால் பொதுத் தேர்தல்நடந்துமுடிந்ததும் ஓரிடைத் தேர்தல் நடைபெறவேண்டிய. அவசி யம்ஏற்படும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 26-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவீரர்

அருமைச் சகோதரங்களே!

வறுமை, துன்பம், இடையூறுகள் கொடியவை; மனிதர் வெறுப்பவை. ஆனல், பிரிவு மிகவுங் கொடியது.

மரணம் பிள்ளைகளைப் பெற்றோரிட மிருந்து பிரிக்கிறது; சிநேகிதர்களைத் தனித்திருக்க விடுகிறது. தனியரைத் தவிக்கவைக்கிறது; சகோதரருக்குச் சதிசெய்து விடுகிறது. நினைக்கும்போ தெல்லாம் ஆற்றொணாத் துயருண்டா கிறது.

மரணம் நமக்குத் துன்பந்தரவேண் டியதில்லை. ஆத்துமம் அழியாதது. இப் பரதேசத்தின்பின் நாம் மோட்சத்திற் சந்திப்போம் என்ற நம்பிக்கை எமக்கு ஆறுதல்தரும்.

மரணத்திலுங் கொடியபிரிவு வேறொன்று உண்டு. அது தந்தை, தாய், தமர்தாரம், மகவு முதலியோரை மறக்கமுடியாத விதமாய்ப் பிரித்துவிடு கிறது. அதுபாவம். பாவத்தினல் இவ் வுலகத்தில் நாம் பிரிந்து விடுவதில்லை. அந்த மறுக்கமுடியாத பிரிவு மறுமைச் சீவியத்திற்தான் உண்டாகும். அதற் குத்தான் நாம் பயப்பட வேண்டும். அதைத்தான் நாம் வெறுக்க வேண்டும்.

யேசு தேவாலயத்தில் காணமற் போனசம்பவம் இதைநமக்கு நினைவூட்டு கிறது. யேசுவை இழக்கச்செய்வது சாவான பாவம். யேசுவை இழப்பது எமக்கு மிகவும் தீமையானது. எல்லாத் தீமைகளிலும் பெரியது. ஆகையால் சாவான பாவத்தையிட்டு நாம்பிரலா பிக்கவேண்டும். தேவன்னை தேவாலயத் தில் யேசுவை இழந்து பரதவித்தாரே. அப்படிப்பட்ட பயமும் பரதவிப்பும் எம் மிடமிருந்தால் யேசுவை ஒருபோதும் இழந்துபோக மாட்டோம்.

உங்கள் அன்புள்ள,

அண்ணை.

விசுவாசம் என்கிற புண்ணியம்

ஒரே தலைவரின்கீழ் ஒன்றித்திருக்கும் சகல விசுவாசிகளின் கூட்டமே திருச் சபை. கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் விசுவசிக்கிறவர்கள். கத்தோலிக்கரா கிய எம்முடையவிசுவாசம் ஒரு மரத்தின் மூலாதார வேரான ஆணிவேரை ஒத்த தாக இருக்கவேண்டும். ஒருமரத்திற்குப் பக்கவேர்களிலும் பார்க்க ஆணிவேர் மிகப் பிரதானமானதாகும். எமது விசுவாசத்தைப் பரிசோதிக்கக் கூடிய தான கருமங்கள் எத்தனையோ இவ்வுல கில் நடைபெறக்கூடும். ஒருமரம் நிற் கும்போது அதன் மீது சுழற்காற்று மோதுகின்றது. அம்மரத்தின் மூலா தார வேரான ஆணிவேர் மரத்தைப் பாதுகாக்கிறது. அதேபோல் எம் முடைய விசுவாசத்துக்கு உலகில் மாறுன கொந்தளிப்புகள் ஏற்பட்ட போதும் அது உறுதியானதாகவும், திடமானதாகவும் இருக்கவேண்டியது மிகமிக அவசியம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பிரசாதத்தின் வெகுமதி

டபிளின் நகரத்தில், குளிரான ஓர் இராத்திரியில், யேசுசபையைச் சேர்ந்த வரான வண. டொயில் சுவாமியார் தம் இல்லிடத்தைநோக்கிவிரைந்து சென்று கொண்டிருக்கும் சமயம் இளம் பெண் ணொருத்தியைச் சந்தித்தார். உடனே அவர் அப்பெண்ணை வழிமறித்துச் சொன்னதாவது: "மகளே! நீ வெகு நேரம் சென்றபின் வெளியில் திரிகின் றாய், வீடுதிரும்பு. அத்துடன் உன்னை நேசிக்கும் யேசுவுக்குத் துரோகமாக எக்கருமத்தையும் செய்யாதே." பின்பு அவர் தம்வழியே சென்றார். அச்சம்ப வத்தையும் மறந்துவிட்டார்.

சிலகாலம் சென்றபின் அவர் ஓர் மறி யற்சாலைக்கு அழைக்கப்பட்டார். அங்கு ஓர் பெண் அதிசீக்கிரத்தில் கொல்லப் படப் போகின்றாள் என்றும் அவள் அக்குருவானவரைக்காண ஆவலாய் இருக்கிறாள் என்றும் அச்சாலையில் உள்ளோர் கூறினர். பின்பு, அவர் அப்பெண் அடைபட்டிருந்த மறியற் கூடத்திற்கு வழிகாட்டப்பட்டார். அங்கு குருவானவர் சென்றதும், இருபது வய துப்பராயத்தையுடையபெண்ணொருத்தி கட்டிலில் உட்கார்ந்திருப்பதைக் கண் டார்.

உடனே அப்பெண் "கடவுளுக்குத் தோத்திரம் உண்டாவதாக. குருவே! வந்திருக்கிறீர்களா?" என்று கூறி னாள். அப்போது குருவானவர் அவ ளைத் தான் அறியாதவராகக் கூறினார். உடனே அவள்தன்னை அவருக்கு அறி முகப்படுத்தத்தொடங்கினாள். இரு வரு டங்களின்முன் தன்னை அவர் வழியிற் சந்தித்ததாகவும், தான் ஓர்துர்நடத்தை யுடையவளாகச் சீவித்ததாகவும், அவர் யேசுவை நிந்தைப்படுத்த வேண்டா மென்றதாகவும், தனக்கு யேசுநாத ரைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றும், ஞானஸ்நானம் பெறவில்லையென்றும், அநேக வாரங்களாகக் குருவானவர் கூறிய வார்த்தைகளைத் தான் நினைத்த தால் வீதியில் திரியவில்லை யென்றும், தொந்தரவுக்கு உள்ளாகவில்லை யென் றும் கூறினாள்.

இதைக்கேட்ட குருவானவர் மறியற் சாலையில் அவள் இருக்கும் காரணம் யாதென்று வினவினார். அதற்கு அவள், "பகியே என்னைக் கொலைபாதகமான சீவியத்துக்கு இழுத்துவிட்டது. மேலும் மேலும் பெலவீனமடைந்தேன். இப் போது கொலையுண்ணப்போகின்றேன். நான் இங்குவந்தபோது கடவுளை வெறுத் தேன். திருச்சபையைப்பற்றிய எக் காரியத்திலும் அக்கறைகொள்ளவில்லை. ஆனால், நீர் கூறியவைகளை மனதி லிருந்து வெளியேற்றவில்லை" என்று கூறி, "யேசுவைப்பற்றிச் சிறிதாகிலும் கூறமாட்டீரா?" எனக்கேட்டுக்கொண் டாள்.

டொயில் சுவாமியார் அவளுடன் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவளில் ஓர் மாற்றம் காணப்பட்டது. தனக்கு ஞானஸ்நானம் கொடுக்குமாறு குருவானவரை வேண்டினாள். அவள் மறுநாட்காலையில் கொலைத்தீர்ப்பைப் பெறப்போகிறபடியால் குருவானவர் அவளுக்கு வேண்டிய புத்திமதிகள்கூறி ஞானஸ்நானம் கொடுத்தார். அதன் பின் ஓர் சிறுபீடம் அச்சாலையில் அமைத்து அதில் திவ்வியபூசை ஒப்புக் கொடுத்து அப்பெண்ணுக்கு மூதலும் கடைசியுமாகத் தேவநற்கருணை வழங்கி னார். அதன்பின் அவள் யேசுவில் நேசம்பூண்டவளாக மரணமடைந்தாள்.

ஆகவே ஓர் அன்பானநற்சொல் அவளின் இரட்சணியத்துக்கு வழியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநற் கருணையே உனது பொக்ஷம்

தேவநற்கருணையைப் பெறத் தவறுவதினால் நீ என்னென்ன காரியங்களை இழக்கின்றாய் என்று ஆராயின்,

1. ஆத்தும ஈடேற்றத்தின் சக்திக்கும், தூய்மைக்கும் காரணகர்த்தராய் இருக்கும் யேசுவின் நேரடியான தொடர்பை இழக்கின்றாய்.

2. உன்னுடைய ஆத்துமத்தைச் சருவேசுரனுக்கு மிகவும் பிரியப்படுத்தும், இஷ்டப்பிரசாதத்தின் விசேஷ வளர்ச்சி குறைகின்றது.

3. கடமையை நிறைவேற்றும் சமயத்திலும், பாவச்சோதனை நேரத்திலும் அரும்பெரும் துணைபுரியும் தேவவரப்பிரசாதத்தை இழக்கின்றாய்.

4. உன் அற்ப பாவங்கள் எல்லாம் கழுவப்படும் ஓர் அரிய சந்தர்ப்பத்தில் நின்று தவறுகின்றாய்.

5. நரகநெருப்பின் வேகாத்தில் நின்று ஒவ்வொரு தேவநற்கருணையும் உன்னைப் பாதுகாக்கும் உதவியைக் கைநெகிழ்கின்றாய்.

6. உனது பாவங்கள் காரணமாக உனக்குவரும் அநித்திய தண்டனையின் ஓர்பகுதி மன்னிக்கப்படும் தருணத்தை இழக்கின்றாய்.

7. அடிக்கடி தேவநற்கருணை உட்கொள்வதால் உண்டாகும் ஆத்தும சந்தோஷத்தையும், ஆறுதலையும் இழக்கின்றாய்.

8. நித்தியத்துக்கும் மோட்சத்தில் உனக்குண்டாகும் பேரின்பத்தின் பெரும்பாகத்தைக் கைநெகிழ்கின்றாய்.

9. தீமையை எதிர்த்துப் போராடி வெற்றிகொள்வதையும், நீண்டகால மன்றாட்டின் பயனை உள்ள வரப்பிரசாதங்களையும், ஆத்துமாக்களின் இரட்சணியம் அல்லது மனந்திரும்புதலையும், சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் உரித்தான அநேக வரப்பிரசாதத்தையும் இழக்கக்கூடும்.

திவ்விய பூசைப்பலியைக் காணது விடுவதால் எவ்வித நன்மையில்நின்றும் உன்னை விலக்குகின்றாய். தேவநற்கருணைக்கு உன்னதமான ஆயத்தம் பூசைப் பலியன்றோ. மரண அவஸ்தை நேரத்தில் உனக்கு ஆறுதலாக இருப்பது நீ பெற்றுக்கொண்ட தேவநற்கருணையும், கண்டுகொண்ட திவ்வியபூசையுமல்லாது வேறுயாதும் இல்லை.

வாரத்துக் கொருமுறையாகிலும் திவ்வியபூசைகண்டு நற்கருணைபெறும் பழக்கத்தைக் கைக்கொள்வாயாக.

யோசித்துப் பார்

மக்கள் வெளியிலும்பார்க்கத் (தோற்றத்திலும்) உள்ளத்திலேயே ஒரேவிதமாயிருக்கிறார்கள்.

* * *

உன்னை மற்றவர்கள் விளங்கிக் கொள்ள வேணுமென்றால், நீயே அவர்களை விளங்கிக் கொள்.

* * *

துன்பத்தைப் பார்த்துச் சிரிக்கப்பழகினவனுக்குச் சீவியம் சிரிப்புக்குரிய அநேக விஷயங்களைக் கொடுக்கும்.

* * *

கோழை நெஞ்சர் தோல்வியை ஏற்றுக்கொள்வர்; வீரர் மறுபடியும் முயற்சிப்பார்கள்.

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

"அன்னை", சங்குசையப்பர் தாபனம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதப்பகுதி விடைகள்

5-1-56 இல் வெளியான கணிதப் பகுதியின் சரியான விடைகள்:

(2)
888
88
8
8
8
1000



எம். அன்ரன்,
பெரதேனியா.

விசுவாசம் என்கிற புண்ணியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேசுநாதர் உயிர்த்தெழுந்த பிற்பாடு தம்மைத் தமது சீஷர்களுக்குக் காண்பித்தார். அக்நேரம் அப்போஸ்தலரான அர்ச். தோமையார் அங்கு இருக்கவில்லை. அர்ச். தோமையார் வந்தபின் யேசுநாதர் உயிர்த்தெழுந்து தங்களுக்குக் காட்சியளித்ததை அப்போஸ்தலர்கள் அவரிடம் சொன்னார்கள். அவரோ அதை விசுவசிக்கவில்லை. "நான் யேசுநாதரின் காயங்களைப்பார்த்து, அவரது விலாவில் என் கைகளையும் வைத்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நான் விசுவசிப்பேன்" என்றார்.

பின்பு யேசுநாதர் அர்ச். தோமையாருக்குக் காட்சிகொடுத்து 'என்கரங்களைப் பார்; உன்கரத்தை என்விலாவில் வை" என்றார். அந்நேரம் அர்ச். தோமையார்: "என் ஆண்டவரே! என்தேவனே!" என்று ஆராதித்தார். அதற்கு யேசுநாதர்: "தோமையே! கண்டதனாலல்லோ விசுவசித்தீர்; கண்டு விசுவசிப்பவனிலும் காணமல் விசுவசிப்பவனே பாக்கியவான்" என்று திருவுளம் பற்றினார்.

கத்தோலிக்க மக்களாகிய, யேசுநாதரின் ஞான மந்தையாகிய நாங்கள் ஒவ்வொருவரும் சாதனையாலும், மூன்மாதிரிகையாலும் விசுவாசம் என்கிற புண்ணியத்தில் செழித்தோங்கிவருவோமாக.

பொழுது போக்கு

இராமன்: என்வீட்டைக் காலிசெய்ய எனக்கு அவசரமாக ஆயிரம் மூட்டைப் பூச்சிகள் வேண்டும்.

கோவிந்தன்: நீ கேட்பது விநோதமாயிருக்கிறது. எதற்காக மூட்டைப் பூச்சிகள்?

இராமன்: நான் இங்கு குடியிருக்கு முன் வீடு எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கவேண்டுமென்கிறார் வீட்டுக்காரர்.

* * *

உபாத்தியாயர்: 1813-ல் என்ன விசேடம்?

பையன்: மாட்டின்லூதர் பிறந்தார்.

உபாத்தியாயர்: அடுத்தஆள் எழும்பு. 1848-ல் என்ன விசேடம்?

அடி. பையன்: லூதருக்கு 5 வயதாயார்.

* * *

நகர் காவலன்: நீ ஏன் மோட்டார் வண்டியை அவ்வளவு வேகமாக ஓட்டிச் சென்றாய்?

மோட்டார்ஓட்டி: வண்டியின் பிரேக் சரியில்லை. அதனால் ஏதாவது விபத்து நேருவதற்குமுன் வீட்டுக்குப் போய்விட விரும்பினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org